வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.01.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 02 பக்கங்கள் : 12




# பெரமுனவுடன் கூட்டணி இல்லை; ரணிலுக்கே முழுமையாக ஆதரவு

## 71 எம்.பிக்கள் கூட்டணியை அறிவித்தார் நிமல் லன்ஸா



கொழும்பு, ஜனவரி 02

சிறீலங்கா பொதுஜன மற்றும் ஏனைய கட்சிகளில் போட்டியிட்டு ஆனால், தற்போது அந்த கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தாத 71 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய கூட்டணியை அமைத்திருக்கின்றோம். இந்தக் கூட்டணி ஒருபோதும் பொதுஜன பெரமுனவுடன் இணையாது. மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பித்து, அந்தக் கூட்டணிக்கான பணிமனையை நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு நிச்சயம் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டிய ஆண்டாகும் என்பதோடு, அது ஜனாதிபதி தேர்தலாகவே

11



# சங்கிலியன் பூங்கா மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 02

நல்லூர் சங்கிலியன் பூங்கா தூய்மைப்படுத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்குரிய பொழுதுபோக்கு மையமாக யாழ். மாநகர சபையால் நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சங்கிலியன் பூங்காவின் நீண்ட கால அபிவிருத்தி பணிகளில் ஏற்பட்ட தாமதங்களால் தற்காலிக பொழுது போக்கு மையமாக பயன்படுத்தக் கூடியவாறு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன்,

11

# ஒன்றிணைந்த எதிரணியின் பொது வேட்பாளராக சஜித்!

## டலஸ் அணியின் டிலான் எம். பி.

கொழும்பு,ஜனவரி 02

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஒன்றி ணைந்த எதிரணி கூட்டணியை வெகுவிரைவில் நிறுவுவோம். கூட்டணியின் பொதுவேட்பாளராக சஜித் பிரேமதாஸவை களமிறக்குவோம். சஜித் - டலஸ் அணிக்குள் முரண்பாடில்லை என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார். கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின்

11

# பெருந்தோட்டங்களில் 51 சதவீதத்தினர் உணவு பாதுகாப்பின்மை நெருக்கடியில்!

## உலக உணவுத் திட்டம்

கொழும்பு,ஜன.02

பெருந்தோட்டப் பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவு பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்துள்ளன. நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடந்த ஆண்டு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நாட்டின் உணவுப் பாதுகாப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலக உணவுத் திட்டமும் உணவு மற்றும் விவசாய அமைப்பும் இணைந்து 2022 மே மாதம் மேற்கொண்ட பயிர்ச்செய்கை மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு ஆய் வில் 28 சதவீதமானோர்

11

# போதைப்பொருட்களை விற்ற இருவர் கோண்டாவிலில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 02

கோண்டாவிலில் பொலிஸார் நேற்று முன்னெடுத்த இரு நடவடிக்கைகளில் போதைப் பொருட்கள் விற்பனை செய்த இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், இவர்களிடம் இருந்து பெருந்தொகை போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கோண்டாவிலில் வீடு ஒன்று சுற்றிவளைக்கப்பட்ட சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து, 500 கிராம் கேரள கஞ்சா, 100 கிராம் ஹெரோயின், ஆறு போதை மாத்திரைகள்,

11

## வடக்கில் போதைப்பொருள்:

# விற்பனையாளர் பட்டியல் தயார் விரைவில் கைது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 02

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டு தற்போது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள். எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் வடக்கில் போதைப் பொருள் ஒழிக்கப்படும் என வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த

11

## சிறுமி துஷ்பிரயோகம்:

# இரு சிறுவர்கள் உட்பட மூவர் ஊர்காவற்றுறையில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 02

சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரும் இரு சிறுவர்களுமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட 14, 16 வயதுடைய இரு சிறுவர்களும், 19 வயது இளைஞருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் ஊர்காவற்றுறை பதில்

11

# வற் வரி அதிகரிப்பால் பாதிப்பே; மக்கள் ஒத்துழைக்க வேண்டும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜன. 02

பெறுமதிசேர் (வற்) வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும், இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாக குறைவடையும். எனவே, கடந்த ஆண்டை போன்று இந்த ஆண்டும் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு

11

# பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டன!

கொழும்பு, ஜன. 02

பெறுமதி சேர் (வற்) வரி அதிகரிப்பால் நேற்று அதிகாலை முதல் பொருட்களின் விலைகள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி, எரிவாயு, எரிபொருட்கள், சிகரெட், மதுபானம் என்பவற்றின் விலைகள் அதிகரித்தன. இதேபோன்று பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணமும் அதிகரித்தது.

**எரிபொருட்கள்**

ஒக்ரைன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 20 ரூபாயால் அதிகரித்தது. இதன் புதிய விலை - 366 ரூபாயாகும். இதேபோன்று, ஒக்ரைன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 38 ரூபாயால் அதிகரித்து புதிய விலை 464 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 29 ரூபாய் அதிகரித்தது. இதன் புதிய விலை - 358 ரூபாயாகும்

சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 41 ரூபாயால் உயர்ந்து புதிய விலை - 475 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் லீற்றர் 11 ரூபாய் அதிகரித்து 236 ரூபாவாகவும் நிர்ண யிக்கப்பட்டுள்ளன.

சிபேற்கோ, லங்கா

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

உலகத்தமிழர் பேரவையின் இமய மலை பிரகடனம் குறித்து சென்னையிலிருந்து நமது ஊடகர் பகவான்சிங் எழுதியிருந்த கட்டுரை தொடர்பாக நேற்றைய தினம் இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

பகவான் எழுப்பியிருந்த இரண்டு சந்தேகங்களுக்கும் உலகத்தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரன் தெரிவித்திருந்த விளக்கங்களை தொடர்ந்து, ஏன் ஒரு சந்தர்ப்பத்தை தமிழர்கள் கொடுத்துப் பார்க்கக்கூடாது என்று பகவான் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவர் எழுப்பிய கேள்விகளில் ஒன்றுக்கு சுரேந்திரனின் பதிலில் அவர் திருப்திகொண்டது தொடர்பாக நேற்றைய பத்தியில் பார்த்திருந்தோம்.

‘தேசிய உரையாடல், ஜனவரியில் துவங்கும் என்றும் இதன் மூலமாக, போர்க் குற்றங்கள் விசாரணை, அதிகாரப் பகிர்வு, மற்றும் இலங்கைக்கான புதிய அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட அனைத்துத் தேசிய பிரச்னைகளுக்கும் தீர்வு எட்டப்படும் என்றும் சுரேன் கூறுகிறார்.’ என்று பகவான் எழுதியிருந்தமை பற்றி இன்று பார்க்கலாம் என்று கூறியிருந்தேன்.

இனப்பிரச்னைக்கு இந்த நாட்டில் எந்தக் காலத்தில் தீர்வு காண்பது என்றாலும் அதற்கு இந்த நாட்டில் வாழும் எழுபத்தைந்து வீதமான சிங்கள மக்களின் ஆதரவு இருக்கவேண்டும். அதாவது, இந்தப் பிரச்னையை தீர்க்கத்தான் வேண்டும் என்ற எண்ணமாவது அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்று நாமும் அடிக்கடி இந்தப் பத்தியில் தெரிவித்து வந்திருக்கின்றோம். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடும் இருக்காது. ஆனால், அது முதலில் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டால்தான் அது குறித்து அனைத்து தரப்பிலும் ஆரோக்கியமான விவாதங்கள் நடக்க வழிபிறக்கும்.

போர்க் குற்ற விசாரணை மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக தேசிய உரையாடலை ஜனவரியில் 25 மாவட்டங்களிலும் தொடங்கப்போவதாக சுரேந்திரன், பகவானுக்கு உறுதியளித்திருக்கிறாராம். கேட்க மகிழ்ச்சியான செய்திதான்.

ஆறு அம்சங்களைக் கொண்ட அந்த இமாலயப் பிரகடனத்தில் இந்த போர்க் குற்ற விசாரணை என்பது தொடர்பாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. அதனைக் கேள்விக்கு உட்படுத்தினால், நிச்சயம் என்ன பதில் வரும் என்பதும் எமக்குத் தெரியாததல்ல. அதனை குறிப்பிட்டால் சிங்கள மக்கள் மத்தியில் ஆரம்பத்திலேயே இந்த முயற்சிக்கு எதிர்ப்பு கிளப்பப்பட்டுவிடும் என்பதால்தான் அது குறித்து அங்கே குறிப்பிடவில்லை என்றுதான் பதில் வரும் என்பதும் நமக்குத் தெரிந்ததுதான். இந்தப் பிரகடனம் குறித்து ஏன் இரகசியம் பேணப்பட்டது என்ற கேள்விக்கும் இதே பதில்தானே வந்திருந்தது.

இவ்வாறு சில விடயங்களை வெளியே சொல்ல முடியாது. அது இரகசியமாகத்தான் வைக்கப்பட வேண்டியது என்ற வாதத்தை பல வருடங்களாகத் தமிழர்கள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். குறிப்பாக யுத்தம் முடிந்த இந்து பதினான்கு வருடகாலத்தில் நாங்கள் மூன்று ஜனாதிபதித் தேர்தல்களை சந்தித்திருக்கின்றோம். அதில் முதலாவதாக சரத் பொன்சேகாவை ஆதரித்தோம். அப்போதும் அவரோடு இரகசியமாக ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் அவர் பதவிக்கு வந்துதும் அதனை செய்வார் என்றும் கூறப்பட்டது. அதனை நம்பிக்கொண்டுதான் அவருக்கு ஒட்டுமொத்தமாக தமிழர்கள் வாக்களித்திருந்தனர். துரதிர்ஷ்டவசமாக அவர் வெற்றி பெறவில்லைத்தான். ஆனால், அதற்கு பின்னர் அரசியல்வாதியாக மாறிய சரத் பொன்சேகா இந்த பதினான்கு ஆண்டுகளில் ஒருநாள்கூட தமிழ் மக்களுக்கு சாதகமான எந்த கருத்தையும் கூறவில்லை என்பதல்ல, பல விடயங்களில் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராகவே கருத்துத் தெரிவித்து வந்திருக்கிறார்.

அதற்கு பின்னர் மைத்திரியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டோம். அவருக்கு வாக்களித்து அவரை பதவியிலும் அமர்த்தி அழகு பார்த்தோம். ஆனால், அவர் ஆட்சிக்கு வந்ததும் பாராளுமன்றத்தை அரசியல்சாசன சபையாக மாற்றி, புதிய அரசமைப்பு சட்டத் தயாரிப்பில் நமது தலைவர்கள் ஐந்த வருடங்களை செலவிட்டார்கள். ஆனால், அந்த முயற்சிகளில் மைத்திரியின் சுதந்திரக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் ஆதரவு வழங்கவில்லை.

ஒரு தடவை கொழும்பு வந்திருந்த போது கூட்டமைப்பு தலைவர்களை சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அந்தச் சந்திப்புக்குப் பின்னர் மைத்திரியை சந்திக்கப் போகின்றேன். அவரிடம் உங்கள் சார்பில் என்ன பேசவேண்டும் என்று கேட்டதற்கு, நமது தலைவர்கள் அவரிடம் சொன்னது, அரசியலமைப்பு தயாரிப்பு பணிகளில் அவரது கட்சியை கலந்துகொள்ளுமாறு அழுத்தம் கொடுங்கள் என்றுதான்.

ஆக, மைத்திரியை ஆதரிப்பதற்கு முன்னர் எமது தலைவர்கள் இரகசியமாக செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன என்பது இன்று வரை தமிழ் மக்களுக்கு தெரியாது. மைத்திரி அதனை மீறுகின்ற போது அதனை வெளியே தெரிவித்து ஏன் செய்கிறீர்கள் இல்லை என்று நமது தலைவர்கள் மைத்திரியிடம் கேட்டதாகவும் இல்லை.

அதைவிடக் கவனத்திற்குரியது, ரணில்மீது பாராளுமன்றில் நம்பிக்கையில்லா பிரேரணை வந்தபோது அவருக்கு ஆதரவு வழங்குவதற்காக பத்து கோரிக்கைகளை அவரிடம் முன்வைத்து அதற்கான ஆணையைப் பெற்றதாகவும் அதனால் அவரை ஆதரிப்பதாகவும் கூறினார்கள் நமது கூட்டமைப்பினர். ஆனால், இதுநடந்து பதின்மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பு வந்தபோதும் அதேபோல பத்து கோரிக்கைளை முன்வைத்திருக்கிறோம். அவர் அதனை செய்வதாக உறுதியளித்துள்ளதால் ஆதரிக்கிறோம் என்றார்கள். ஆனால், அப்போதுகூட முதலில் வாக்களித்த பத்து கோரிக்கைகளை அந்தப் பதின்மூன்று மாதங்களில் எவற்றை ரணில் நிறைவுசெய்தார் என்பதும் இன்று வரை தமிழ் மக்களுக்கு தெரியாது.

இப்படி இரகசியமாக ஒப்பந்தங்களை செய்துகொண்டதால் பதினான்கு ஆண்டுகள் சென்றனவே தவிர தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

அதேபோல இன்னுமொரு ஐந்து வருடங்களை தமிழ் மக்களை இழக்கச் சொல்கிறார்களா நமது உலகத் தமிழர் பேரவையினர் என்பதை பகவான் கேட்டு சொல்ல வேண்டும்.

அதிகம் வேண்டாம், இந்த இமாலய பிரகடனத்தில் கையெழுத்திட்ட தேரர்களில் ஒருவரைக் கொண்டு, போர்க் குற்ற விசாரணையை வலியுறுத்தித்தான் நாங்கள் தேசிய உரையாடலை தொடங்கவிருக்கின் றோம் என்று ஓர் அறிக்கையை முதலில் வெளியிடச் சொல்லி சுரேந்திரனிடம் கோரிக்கை விடுங்கள். அவர்கள் அப்படி ஓர் அறிக்கையை வெளியிட்டால், ஐந்து வருடங்கள் போனாலும் பரவாயில்லை பொறுத்துப் பார்ப்போம் என்று நாங்களும் காத்திருக்கின்றோம்.

**- ஊர்க்குருவி.**

# யாழ். மாநகர சபையின் பவளவிழா

யாழ்ப்பாணம்,ஜன.02

யாழ். மாநகர சபையின் பவளவிழா நேற்று மாநகர சபையின் முன்றலில் அதன் ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கடந்த 75 ஆண்டுகளில் யாழ். மாநகர சபையில் பணியாற்றிய 28 முதல்வர்கள், 17ஆணையாளர்களில் தற்போது வாழ்ந்து வரும் 4 மாநகர சபை முதல்வர்கள், 6ஆணையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் செ ல்லன் கந்தையன், திருமதி ப. யோகேஸ்வரி பற்குணராஜா, இமானுவேல் ஆனல்ட், சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோர்களும் சமகாலத்தில் ஆணையாளராக கடமைபுரிந்த சீ. வீ. கே. சிவஞானம், வே. பொ. பாலசிங்கம், பொ. வாகீசன் ஆகியோர் நினைவு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டனர். மூன்று ஆணையாளர்கள் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் சமுகம் தரவில்லை.

இவ் நிகழ்வில் யாழ். மாநகர சபை பிரதி ஆணையாளர் வே.ஆயகுலன், செயலாளர் த.தயாளன், பிரதமகணக்காளர் திருமதி.ம.வசந்தமாலா, உள்ளிட்ட மாநகரசபை பதவிநிலை அதிகாரிகள், சுகாதார பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

























படங்கள் : ஐ.சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
02.01.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது தீர்க்கமான ஆண்டா?

நானும் இருக்கின்றேன் - என்பதை காண்பிப்பதுபோல் அவ்வப்போது சம்பந்தன் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். 2024ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான தீர்க்கமான ஆண்டாக இருக்கும் என்று கூறியிருக்கின்றார். இந்த ஆண்டு தேர்தல்களுக்கான ஆண்டு. இந்த அடிப்படையில், பிறந்துள்ள புதிய ஆண்டை தீர்மானகரமான ஆண்டு என்று சம்பந்தன் கூற முற்பட்டிருக்கலாம் - ஆனால், கடந்த பதினான்கு ஆண்டுகளாக சம்பந்தன் இவ்வாறான கதைகளைத்தான் கூறிவந்திருக்கின்றார். நல்லவேளையாக, அடுத்த சித்திரைக்கு முன்னர், புதிய அரசியல் யாப்பு ஒன்றை எதிர்பார்க்கின்றோம் என்று கூறாமல் விட்டதை எண்ணி மகிழ்ச்சியடையலாம்.

இந்த ஆண்டு மட்டுமல்ல கடந்து சென்ற அனைத்து ஆண்டுகளுமே தமிழ் மக்களின் அரசியல் வாழ்வைப் பொறுத்தவரையில், தீர்மானகரமான ஆண்டுகளாகத்தான் இருந்தன - இனிவரப் போகும் ஆண்டுகளும் தீர்மானம்மிக்கதாகத்தான் இருக்கும் - ஆனால், கழிந்து செல்லும் ஒவ்வோர் ஆண்டுகளையும் அந்தக் காலத்துக்கான தமிழ் தலைமைகள் என்போர் எவ்வாறு கையாண்டனர் என்பதைப் பொறுத்தே அந்த ஆண்டின் முக்கியத்துவம் அமைகின்றது. சம்பந்தன் தீர்மானிக்கும் இடத்திலிருந்தபோது தனக்கான காலத்தை தீர்மானகரமாகப் பயன்படுத்தவில்லை. அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு ஒரு படி முன்னோக்கிச் சென்றிருக்கும். போர் தோல்விக்கு பின்னரான பத்து வருடங்கள் முற்றிலும் சம்பந்தனின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது.

குறிப்பாக, 2015இற்கு பின்னரான காலப்பகுதியில், முதல் இரண்டு வருடங்களில் சில விடயங்களை முன்னெடுத்திருக்கலாம். ஆனால், சம்பந்தன் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மாறாக, வரமுடியாத அரசியல் யாப்புக்கு பின்னால் காலத்தை விரயம் செய்து இறுதியில் எதுவுமில்லை என்னும் நிலைக்குள் தமிழ் மக்களை தள்ளினார். இன்று வசதியுள்ள மத்தியதர வர்க்கம் ஒன்று நாட்டைவிட்டு வேகமாக வெளியேறும் ஆர்வத்தில் இருக்கின்றது.

இதற்கு என்ன காரணம்? அன்று அரசமைப்பில் இருக்கின்ற வாய்ப்புகளை உச்சபட்சமாக பயன்படுத்தியிருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை துளிர்விட்டிருக்கும். நாட்டில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்னும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். ஆனால், நிலைமைகள் தொடர்ந்தும் பின்னடைவுகளை கண்டதால் மக்கள் மத்தியில் அரசியல் தொடர்பான நம்பிக்கை சீர்குலைந்து விட்டது. சம்பந்தன் தனக்கான காலத்தை உச்சபட்சமாக பயன்படுத்தாதமையால்தான் இவ்வாறானதொரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இப்போதும் சம்பந்தன் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அவ்வப்போது உச்சரிக்கின்றார். 13ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்ற நிலையில் எந்த அடிப்படையில் 13இல் உள்ளவற்றை தாண்டி ஓர் அரசியல் யாப்பு வரமுடியும்? அரசியல் யாப்பு வரலாம் ஆனால், அதில் 13ஆவது திருத்தத்தில் உள்ளவற்றையும்விட அதிகமான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்குமா? இந்த சாதாரண உண்மையை சம்பந்தனால் விளங்கிக்கொள்ள முடியவில்லையா அல்லது தமிழ் மக்களின் வாழ்வில் முன்னேற்றங்கள் ஏற்படுவதில் எந்தவோர் அக்கறையும் சம்பந்தனுக்கு இல்லையா?

எனவே 2024ஆம் ஆண்டை, தீர்மானகரமான ஆண்டாக மாற்றியமைக்க வேண்டும் என்றால் அதற்கான முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசிய கட்சிகளின் புத்திசாதுர்யமான முடிவுகளில்தான் தங்கியிருக்கின்றது.

## சிறப்பு சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜன. 02*

நீர்வேலி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து பரிபாலன சபை தலைவர் த. சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார். சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல், "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

## குருபூசையும் சொற்பொழிவும்

*யாழ்ப்பாணம், ஜன. 02*

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவு தொடர் 38 (சிறப்புலி நாயனார் ) தெல்லிப்பழை சிவபூதராயர் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில், சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப் புலவர் நித்தியபாபுதரன் 'செந்நெல்லரிசியில் அமுது செய்து இறைவனுக்கு படைக்கும் திருத்தொண்டு புரிந்த நாயனார்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார் சொற்பொழிவின் நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)



## கப்பலேந்தி மாதா ஆலயத்தில் புத்தாண்டு திருப்பலி சிறப்பு!

*வடமராட்சி, ஜன. 02*

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை புத்தாண்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்று காலை 05.30 மணிக்கு ஆரம்பமான புத்தாண்டு திருப்பலியை அருட்தந்தை தயாபரன் ஒப்புக் கொடுத்தார். திருப்பலியில் கட்டைக்காடு பங்கு மக்கள் பங்கேற்றனர்.

இதன்போது, அருட்தந்தை தயாபரன் தலைமையில் பங்குமக்கள் முன்னிலையில் கடலும் ஆசிர்வதிக்கப்பட்டது. (ஐ-02)

## வெற்றிலைக்கேணி அந்தோனியார் ஆலயத்தில் புதுவருடத் திருப்பலி!



*வடமராட்சி, ஜன. 02*

கட்டைக்காடு பங்குக்கு உட்பட்ட வெற்றிலைக் கேணி அந்தோனியார் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை புது வருடத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கட்டைக்காடு பங்குத் தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நேற்று காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த புதுவருட திருப்பலியில் பலர் கலந்து கொண்டு தங்களது இறை வேண்டுதல்களை நிறைவேற்றியதுடன் பங்குத் தந்தை அமல்ராஜ் அடிகளாரால் பங்குமக்கள் முன்னிலையிலும் கடலும் ஆசிர்வதிக்கப்பட்டது. (ஐ)

## வதந்தி பரப்பினால் சட்டம் பாயும்

*கொழும்பு, ஜன. 02*

வற் வரி தொடர்பில் பொய்யான அறிக்கைகளை வெளியிடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் பணிமனை பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வற் வரிக்கு தொடர்பில்லாத அரக்கனை உருவாக்கி மக்களை தூண்டி விடுபவர்களுக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வற் திருத்தம் தொடர்பில் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வற் வரித் திருத்தம் தொடர்பில் மக்கள் சரியான புரிதலை கொண்டிருப்பது மிகவும் அவசியம் - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 02 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - மார்கழி 17
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களை சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரார்த்தனை நிறைவேறும்.

**இடபம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். சகோதரி உதவு வார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும்.

**மிதுனம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள் வீர்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக் கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தி னர்களின் வருகையால் வீடுகளைக் கட்டும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தோற்றப்பொலிவு கூடும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்ச னங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப் பீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட் டுக்கொடுத்து போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடு படுவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்து வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத் தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கி யத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்த வர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**தனுசு**
குடும்பத்தில் அமைதி திரும்பும். உறவினர்களு டன் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியா பாரத்தில் தள்ளிப்போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பு இருக்கும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியா பாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும்.

**மீனம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உய ரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

# அ. தி. மு.க. கட்சியினரின்மீது விரைவில் வழக்குகள் பாயும்?

## ஆளுநரிடம் அனுமதி கோரினார் முதல்வர்

சென்னை, ஜன. 02

அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்கு தொடர விரைவாக அனுமதி வழங்கும்படி ஆளுநர் ரவியி டம் முதல்வர் ஸ்டாலின் வலியு றுத்தியுள்ளார். இந்த விடயம் அ. தி. மு. கவினரை அச்சத்தில் தள்ளியுள்ளது.

அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் வீரமணி மீது, லஞ்ச ஒழிப்பு பொலிஸார் வழக்கு தொடர அனுமதி கோரி ஆளு நருக்கு தமிழக அரசு அனுப்பிய கோப்பு 15 மாதங்களாக நிலு வையில் உள்ளது. இதேபோல, முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர் மீதும் வழக்கு தொடர அனுமதி கோரிய கோப்பு, ஏழு மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது.

ஆளுநர் ஒப்புதல் அளிக் காததால், சம்பந்தப்பட்ட முன் னாள் அமைச்சர்கள் தெம்பாக இருந்தனர். தமிழக அரசுக்கும், ஆளுநருக்கும் இடையிலான மோதலும், அவர்களுக்கு சாதக மாக இருந்தது.

இந்த நிலையில், அண்மை யில் ஆளுநர் ரவியை முதல்வர் ஸ்டாலின் சந்தித்து பேசினார். 30 நிமிடங்கள் நீடித்த இந்த சந்திப்பில், அ.தி.மு.க., முன் னாள் அமைச்சர்கள் மீது லஞ்ச ஒழிப்பு பொலிஸார் வழக்கு தொடர அனுமதி கோரிய கோப்பின் மீது, உடனடியாக அனுமதி வழங்கும்படி ஆளு நரை வலியுறுத்தினார். இதன் போது, ஆளுநரின் சந்தேகங்க ளுக்கும் விளக்கமளிக்கப்பட் டது.

எனவே, விரைவில் அந்த கோப்புகள் மீது, ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என்று கூறப்படுகின்றது. இதனால், அ. தி. மு. கவினர் அச்சத்தில் உள்ள னர் என்று கூறப்படுகின்றது.

# தி. மு. கவுடன் இணைவதற்கு வியூகம் அமைக்கிறது பா. ம. க!



சென்னை, ஜன. 02

பாராளுமன்ற தேர்தல் வரு கிற ஏப்ரல் மாதம் கடைசியில் நடைபெறும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இதனால் ஒவ் வோர் அரசியல் கட்சிகளும் இப் போதே கூட்டணி கட்சிகளு டன் பேச்சு நடத்துகின்றன.

இந்தத் தேர்தலில் மத்தியில் பாரதிய ஜனதா கட்சி தலைமை யில் ஓர் அணியும், காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட 26 கட்சிகள் அடங் கிய “இந்தியா கூட்டணி“ மற் றோர் அணியாகவும் களம் இறங்குகிறது.

இந்த கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டணி வைக்க மாநில கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்த வரை தி.மு.க., காங்கிரஸ், விடு தலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சி, தமிழக வாழ்வு ரிமை கட்சி, ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ் லிம் லீக் உள் ளிட்ட கட்சிகள் ஓர் அணியாக களம் இறங்குகின்றன.

கடந்த தேர்தலில் இந்த கூட் டணியில் இடம் பெற்றிருந்த ஐ. ஜே. கே. கட்சியின் பாரி வேந்தர் இந்த முறை தி.மு.க. கூட்டணியில் இல்லை. அதற்கு பதில் கமல்ஹாசன் கட்சியான மக்கள் நீதிமய்யம் கூட்டணி யில் இடம் பெறும் என தெரி கிறது.

இந்த நிலையில் எதிர் அணி யில் பா.ஜனதாவுடன் அ.தி.மு. க. கூட்டணி கிடையாது என்று அக்கட்சியின் பொதுச்செயலா ளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக அறிவித்துள் ளார். இதனால், இந்த கூட்ட ணியில் இடம்பெற்றுள்ள பா. ம.க. பா.ஜனதாவுடன் கூட் டணி சேருமா?அல்லது அ.தி. மு.க.வுடன் கூட்டணி வைக் குமா? என்ற எதிர்பார்ப்பு நிலவு கிறது.

பா.ம.க.வை பொறுத்தவரை எந்தக்கூட்டணி வலுவாக உள்ளதோ அந்த கூட்டணியில் சேர்ந்து வெற்றி பெறுவதற்கு தான் முன்னுரிமை அளிக்கும்.

அந்த வகையில் பார்க்கும் போது அ.தி.மு.க. வுடன் கூட் டணி வைக்குமா? அல்லது பா. ஜனதாவுடன் கூட்டணி வைக் குமா? என்ற எதிர்பார்ப்பு நிலவு கிறது.

இந்த இரு கட்சிகளும் தனித் தனியாக மோதும் நிலையில் பா. ஜனதா பக்கம் செல்வதா? அல்லது அ.தி.மு.க.வுடன் கூட் டணி வைப்பதா? என்ற தடு மாற்றத்தில் பா.ம.க. உள்ளது.

இதனால் இரு கட்சிகளை யும் தவிர்த்து விட்டு தி.மு.க. கூட்டணிக்கு செல்லலாமா? என்று பா.ம.க. காய் நகர்த்து வதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இதற்கு அச்சாரமாக பா. ம.க. நிறுவுநர் டாக்டர் ராம தாஸ் கடந்த 2 நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை கோட்டைக்கு சென்று சந்தித்துள்ளார்.

அ.தி.மு.க - பா.ஜனதா கூட் டணி இல்லை என்றாகி விட்ட நிலையில், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி வலுவான கூட்டணி யாக தெரிவதால் இங்கு சேர வாய்ப்பு இருக்குமா? என்று கருதப்படுகின்றது.

எனினும், பா. ம. க. இந்தக் கூட்டணியில் இடம்பெறு வதை விடுதலை சிறுத்தைகள், காங்கிரஸ் கட்சிகள் விரும்ப வில்லை என்று கூறப்படுகின் றது. (ஐ)

# கோவில், இந்து மதத்தை காட்டி பா. ஜ. கவால் வாக்கு பெற முடியாது!

## வைகோ சொல்கிறார்



சென்னை, ஜன. 02

கோவிலையும் இந்து மதத்தையும் காட்டி தமிழ்நாட் டில் பா. ஜ. கவால் வாக்கு வாங்க முடியாது என்று ம. தி. மு. க. பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

நேற்று அவர் செய்தியாளர் களை சந்தித்தபோதே மேற் கண்டவாறு கூறினார்.

சுதந்திர இந்தியாவில் நெருக் கடி நிலையைவிட மோசமான சட்டங்களை பா. ஜ. க. அரசு கொண்டு வந்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் உருவாக்கி இருக்கும் இந்தியா கூட்டணி, மக்கள் சக்தியைத் திரட்டி மோடி அரசை ஆட்சி பீடத்தி லிருந்து அகற்றும்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் வெற்றிகரமாக நடைபெறுகிறது. இந்தியா வுக்கே வழிகாட்டக்கூடிய இடத்தில் மு.க.ஸ்டாலினின் திராவிட மொடல் ஆட்சி இருக்கிறது, கோவிலையும் இந்து மதத்தையும் காட்டி தமிழ்நாட்டில் பா. ஜ. கவால் வாக்கு வாங்க முடியாது என்று கூறினார். (ஐ)





தாயகம் அறக்கொடை நிறுவனம் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தை சேர்ந்த 150 குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக 5ஆவது வருடமாக பொங்கல் பானைகள், பொங்கல் பொதிகளை வழங்கியது. அத்துடன், 646 மாணவர்களுக்கு சீருடைகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கியது. இந்த நிகழ்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ஐ)

# தேர்தல் பிரசார நோக்கிலேயே ரணில் வடக்குக்கு வருகிறார்!

## சிறீதரன் எம். பி.



கிளிநொச்சி, ஜன. 02

**தமிழ் மக்களின் ஆதரவை எப்படி பெறுவது என்ற நோக்கத்தோடுதான் அவர் வடக்குக்கு வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - என்று இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பெறுமதி சேர் (வற்) வரி அதிகரிப்பானது பொருளாதார இக்கட்டுநிலையிலுள்ள மக்களை பெரிதும் பாதித்துள்ளது. இதனால், மக்கள் அரசுக்கு கிளர்ந்தெழும் நிலைக்கு வழியேற்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

மக்களுக்கு வருமானம் இல்லை மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. 'அறகலய' போராட்டம் போன்ற அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலைக்கு வழியேற்படும். சுயமாக மக்களின் நலன்களை பற்றி அரசு சிந்திக்காது சர்வதேச நாணய நிதியத்திற்காகவே செயற்படுகிறது.

தேர்தல் பிரசாரத்துக்கான ஆயத்தமாகவே ஜனாதிபதி வடக்கு வருகை உள்ளது. பிரச்னையை பாராளுமன்றத்திலேதான் தீர்க்க முடியும் என்கிறார். கட்டடம் கட்டித் தருகிறேன் - கைத்தொழில் பேட்டை அமைக்கிறேன் என்று மாத்திரம் சொல்வதற்காக வருகிறார்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பணத்துக்கு ஒன்றும் நடைபெறவில்லை. கடந்த வரவு - செலவு திட்டத்தில் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், தேர்தல் நடைபெறவில்லை. தமிழ் மக்களின் ஆதரவை எப்படி பெறுவது என்ற நோக்கத்தோடுதான் அவர் வடக்குக்கு வருகிறார் - என்றார். (ஐ)

# உணவகத்துக்குள் புகுந்து இளைஞர்மீது வாள்வெட்டு!

வடமராட்சி, ஜன. 02

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு முன்பாக உள்ள உணவகம் ஒன்றில் வேலை செய்யும் இளைஞன் மீது, நேற்றுமுன்தினம் வன்முறை கும்பல் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் துன்னாலை வடக்கை சேர்ந்த 21 வயது இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உணவகத்தில் பணியிலிருந்த இளைஞர் மீதே மோட்டார் சைக்கிளில் வந்த குழு வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ - 02)

# எலிக்காய்ச்சலால் இளைஞர் மரணம்!

வவுனியா, ஜன. 02

வவுனியா - செட்டிக்குளத்தை சேர்ந்த இளைஞரொருவர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞனுக்கு சில தினங்களாக காய்ச்சல் இருந்த நிலையில் செட்டிக்குளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த இளைஞர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

செட்டிகுளம், முகத்தான் குளத்தை சேர்ந்த பிரசங்கர் என்ற 22 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)



# நாகர்கோவிலில் ஒதுங்கியது இனந்தெரியாத மிதவை கலம்!

வடமராட்சி, ஜன. 02


வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கிழக்கு கடற்றொழிலாளர் சங்க எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வத்தை வடிவான 18 அடி நீளம் கொண்டதும் 10 அடி அகலம் கொண்ட இனந்தெரியாத மிதவை ஒன்று கரைக்கு அடித்து வரப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை கரையொதுங்கிய இந்தக் கலத்தை மீனவர்கள் கடும் முயற்சி எடுத்து கரையில் இழுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கரையொதுங்கிய இந்தக் கலம் தொடர்பில் பொலிஸார் மற்றும் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சில நாட்களுக்கு முன்பு வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி கடற்கரையிலும் மிதவை ஒன்று கரையொதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 8 தடவை கருசிதைவால் பாதிக்கப்பட்ட இளம் தாய் குழந்தையை பிரசவித்தார்!



வடமராட்சி, ஜன. 02

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் எட்டு தடவைகள் தொடர்ச்சியாக கருச்சிதைவால் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் ஒன்பதாவது தடவையில் ஆரோக்கியமான குழந்தையை பிரசவித்துள்ளார்.

2024 புதுவருட தினமான நேற்று திங்கட்கிழமை குழந்தையை அவர் பிரசவித்தார்.

24 வயதான தாயார், திருமணம் முடித்த காலத்தில் இருந்து தொடர்ச்சியாக எட்டு தடவைகள் கருச்சிதைவால் பாதிக்கப்பட்டார்.

இதன் பின்னர் குழந்தையை பிரசவித்த தாயார் கர்ப்பத்துக்கு முன்னரும் - கர்ப்ப காலத்திலும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கண்காணிப்பு - சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்நிலையில், புது வருட தினமான நேற்று அவர் குழந்தையை பிரசவித்தார். மகப்பேற்று வைத்திய நிபுணர் சிவராஜா சிஜெதரா தலைமையிலான மருத்துவ குழுவினர் குறித்த தாயாருக்கு சிகிச்சையை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு கண்சிகிச்சை உபகரணம்!

கிளிநொச்சி, ஜன. 02

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவ மனைக்கு கண்சிகிச்சை உபகரணம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

புறுட்ஸ் கபி கனடா நிறுவனத்தின் 25 இலட்சம் ரூபாய் நிதியுதவியில் இந்த உபகரணம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் சுகந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கண்சத்திர சிகிச்சை நிபுணர், நிர்வாகத்தினர், நோயாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சீனாவின் கப்பல்கள் இலங்கை வர ஒரு வருடத்துக்கு அனுமதியில்லை!

## இந்தியாவுக்கு அறிவித்தது இலங்கை

சென்னை, ஜன. 02

**ஒரு வருட காலத்திற்கு சீனாவின் ஆராய்ச்சி கப்பல்கள் தனது துறைமுகத்துக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை என்று இலங்கை அரசு இந்தியாவிடம் தெரிவித்துள்ளதாக இந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையின் துறைமுகத்துக்கு உள்ளேயும் விசேட பொருளாதார வலயத்துக்குள்ளும் சீனாவின் ஆராய்ச்சி கப்பல்கள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்போவதில்லை என புதுடில்லிக்கு கொழும்பு தெரிவித்ததாக தனக்கு நம்பிக்கையான மூலங்கள் தெரிவித்தன என்றும் அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக இந்தியாவுக்கு இலங்கை தெரிவித்துள்ளது. இதனால், ஜனவரி 5ஆம் திகதி முதல் மே மாதம் வரை தென் இந்து சமுத்திர பகுதியில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு சீனாவின் ஜியாங் யாங் கொங் - 3 ஆராய்ச்சி கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்காது என்பதே அர்த்தம்.

இதேசமயம், மாலைதீவின் கரையோர பகுதியில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு குறிப்பிட்ட கப்பலுக்கு அனுமதியளிக்க வேண்டும் என மாலைதீவு அரசாங்கத்திடம் சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்து சமுத்திரத்துக்குள் சீனாவின் விஞ்ஞான ஆராய்ச்சி கப்பல்கள், ஏவுகணை கண்காணிப்பு கப்பல்களை அனுமதிப்பது, அவற்றுக்கு துறைமுகங்களில் இடமளிப்பது குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் கொழும்புக்கு கடும் எச்சரிக்கையை விடுத்தன. இதையடுத்தே, கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஒரு வருட தடை குறித்து இந்தியாவுக்கு அறிந்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# வெள்ளத்தில் மூழ்கியது கொழும்பு - ஆர்மர் வீதி!

கொழும்பு, ஜன. 02

புதுவருட தினமான நேற்று திங்கட்கிழமை கொழும்பில் தொடர்ச்சியாக கனமழை பெய்தது. இதனால், ஆர்மர் வீதி பகுதி வெள்ளத்தில் மூழ்கியது.

வெள்ளம் காரணமாக அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. இதனால், பொது மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகினர். (ஐ)

# வெங்காயத்தின் விலை சடுதியாகக் குறைந்தது

கொழும்பு, ஜன. 02

கடந்த சில வாரங்களாக 600 ரூபாயாக இருந்த ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 300 முதல் 350 ரூபாயாக குறைவடைந்துள்ளது.

பாகிஸ்தான், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து அதிகளவில் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் வெங்காயத்தின் விலை குறைவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஏனைய மரக்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டனர். (ஐ)



# புதுவருடமான நேற்று கடமைகளை தொடங்கினார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, ஜன. 02

2024 புது வருட தினமான நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடமைகளை ஆரம்பித்தார். இதன் பின்னர் அவர் தனது பணிமனையில் அமைச்சர்கள் மற்றும் தனது பணிமனை ஊழியர்களை சந்தித்தார்.

கடமைகளை ஆரம்பிக்கும் முன்னர், ஜனாதிபதி தேசிய கொடியை ஏற்றிவைத்தார். இதன் பின்னர், நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, ஜனாதிபதி பணிமனை ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எழுத்துக்கொண்டனர். தனது ஊழியர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த ஜனாதிபதி அவர்களுடன் உரையாடினார்.

இதன்போது, சவால்களை சரியாக புரிந்துகொண்டு 2024இல் நாட்டை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு நம்பிக்கையான மனப்பான்மையுடனும் உறுதியுடனும் அனைவரும் ஒன்றி ணைந்து அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியதன் அவ சியத்தை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சர்கள் மற்றும் ஊழியர்களுடன் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷு மாரசிங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# போதைப்பொருள் வர்த்தகரின் ஹோட்டல் இடித்தழிக்கப்பட்டது



கொழும்பு, ஜன. 02

பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான சட்டவிரோதமான ஹோட்டல் பொலிஸாரால் நேற்று இடித்தழிக்கப்பட்டது.

இதனிடையே, கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த ஹோட்டலின் பணிப்பாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரை யோர பகுதியில் அமைந்துள்ள இந்த ஹோட்டல் தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் போதைப்பொருள் வர்த்தகரான ஷிரான் பாசிக்கு சொந்தமானது என அடையாளம் காணப்பட்டது. இதற்கமைவாக, விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த ஹோட்டல் கடலோர பாதுகாப்பு சட்டங்களை மீறி சட்டவிரோதமான முறையில் போலி ஆவணங்களை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டதாக அறிந்தனர்.

இதனை தொடர்ந்து பொலிஸார், கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரிகளால் நேற்று அந்த ஹோட்டலை இடித்தழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது, அந்த ஹோட்டலின் பணிப்பாளர் உட்பட மூவர் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, அவர்கள் மூவரும் கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக கைது செய்தனர்.

மேலும், குறித்த போதைப் பொருள் வர்த்தகர் தொடர்பில் பொலிஸ் சட்டவிரோத சொத்து குவிப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# கரையோர மார்க்க ரயில் சேவை நேர அட்டவணை திருத்தப்பட்டது

கொழும்பு, ஜன. 02

புதுவருட தினமான நேற்று திங்கட்கிழமை முதல் கரையோர மார்க்க ரயில் சேவை நேர அட்டவணை திருத்தியமைக்கப்பட்டது.

இதன்படி, மாத்தறை ரயில் நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த ருஹுணு குமாரி ரயில் நேற்று அதிகாலை 5.25 மணியளவில் பெலியத்த ரயில் நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது.

இதுவரை வார நாட்களில் மட்டும் இயங்கி வந்த சகாரிகா கடுகதி ரயில் சேவை சனிக்கிழமைகளிலும் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் வார நாட்களில் இரவு 8.35 மணிக்கு மருதானையில் இருந்து தெற்கு பயாகலை வரை இயக்கப்படும் ரயில் நேற்று முதல் அளுத்கம வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மருதானையில் இருந்து அளுத்கம வரை பிற்பகல் 2 மணிக்கு இயக்கப்படும் ரயில் நேற்று முதல் பிற்பகல் 1.55 மணிக்கு மருதானையில் இருந்து அளுத்கம வரை இயக்கப்படவுள்ளது.

இந்த ரயில் நேர அட்டவணை திருத்தம் தொடர்பில் இரண்டு வாரங்கள் பரிசோதிக்கப்பட்ட பின்னர், தொடர் நடவடிக்கையை நடைமுறைப் படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என புகையிரத திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் என். ஜே. இந்திபொலகே தெரிவித்தார்.


டெங்கு விழிப்புணர்வில் ஈடுபட்டோர்

# யாழில் டெங்கு பரவல் தீவிரம்; விழிப்புணர்வு நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 02
யாழ்ப்பாணத்தில் அதிகள வான டெங்கு தொற்றாளர்கள் இனம் காணப்பட்டமையுடன் டெங்கு இறப்புகளும் பதிவாகி யுள்ளன. டெங்கு நோய் பர வுகை தொடர்பிலான விழிப்பு ணர்வு நடவடிக்கையை சமூக மட்டத்தில் மேற்கொள்ளும் வகையிலான நடவடிக்கையை சிறகுகள் அமையம் ஆரம்பித் திருக்கின்றது.

முதற் கட்டமாக யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள கல்வி நிலைய மாணவர்களுக் கான டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டன.

றோயல் அக்கடமி, நாவலர் கல்வி நிலையம், எடிசன் அக்க டமி, ஐடியல் அக்கடமி, அகரம் கல்வி நிலையம் ஆகிய கல்வி நிலையங்களில் 500இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தமர்வும் மதியுரை பிரசுரமும் வழங்கப் பட்டது.

மேலும் டெங்கு தொற்றின் தீவிர தன்மையை எடுத்து ரைக்கும் வகையில் பல்வேறு வகையிலான தொடர் செயல் பாடுகள் சிறகுகள் அமையம் ஊடாக மேற்கொள்ளப்பட வுள்ளது.

உங்கள் பிரதேச சமூக நிறுவனத்தில் டெங்கு தொடர்பிலான விழிப்புணர் வூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்பு கொள் ளவும். (ஐ)

# சமகால அரசியல் அரங்கு கோண்டாவிலில் நடைபெற்றது!



யாழ்ப்பாணம், ஜன. 02
தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு நேற்று முன்தினம் கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலை வர் பொ. ஐங்கரநேசன் தலை மையில் நடைபெற்ற இந்த உரையரங்கு 'தமிழ் அரசியல் நோக்கில்...' என்பதை தொனிப் பொருளாகக் கொண்டு நடை பெற்றது.

'உத்தேச கடற்சட்டத் திருத்த வரைவு' என்னும் தலைப்பில் சமூகச் செயல்பாட் டாளர் இரேனியஸ் செல்வின், 'புத்தாண்டை எதிர்கொள்ளல்' என்னும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் மற்றும் 'இமாலயப் பிரகடனம்' என் னும் தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அரச றிவியல் துறைத்தலைவர் பேரா சிரியர் கே. ரி. கணேசலிங்கம் ஆகியோர் தமிழ் "அரசியல் நோக்கு நிலையில்" இருந்து உரையாற்றியிருந்தனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலங்கை மற்றும் சர்வதேச அளவில் அரசியலில் முக்கியத்துவம் பெறும் விட யங்கள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக சமகால அரசியல் உரையரங்கு என்னும் நிகழ்ச் சியை தொடர்ச்சியாக முன்னெ டுத்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறை பிரதேச செயலராக சத்தியசீலன் நேற்று பொறுப்பேற்றார்!



வடமராட்சி, ஜன. 02
பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் பருத்தித்துறை பிரதேச செயல கத்தின் செயலாளராக கடமை களை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று திங்கட்கிழமை காலை மருதடி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளை தொடர்ந்து புதிய பிரதேச செயலாளர் தவில் நாதஸ்வர இசையுடன் செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் தனது கடமைகளை பொறுப் பேற்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் பதில் பிரதேச செயலாளர் ச. சிவசிறி, உதவி பிரதேச செயலா ளர் பசுபதி தயானந்தன் உட்பட பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் பங்கேற்றனர்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக கடமையாற்றிய ஆழ்வார்பிள்ளை சிறி வடக்கு மாகாண பிரதம செயலக செயலாளராக பதவியுயர்வு பெற்றுச்சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சி. சத்தியசீலன் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் பருத்தித்துறை பிரதேச செய லாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# விபத்தில் இருவர் மரணம்

கொழும்பு, ஜன. 02
பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி ஏற்படுத்திய விபத்தில் இருவர் உயிரிழந்த னர். மேலும் இருவர் காயம டைந்துள்ளனர்.

களுத்துறை - கட்டுவன - ஊருபொக்க வீதியில் இடம் பெற்ற விபத்தில் பாரவூர்தி மரம் ஒன்றுடன் மோதியே விபத்து சம்பவித்தது.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் நால்வர் கட்டுவன மருத்து வமனையில் சேர்க்கப் பட்டனர். இந்த நிலையில், சாரதி உயிரிழந்தார். ஏனைய மூவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக வரஸ்முல்லை மருத்துவ மனை யில் சேர்க்கப்பட்டனர். அங் கும் ஒருவர் உயிரிழந்தார்.

# மோதலை தடுக்க சென்றவர் கத்திக் குத்தில் படுகாயம்!

கொழும்பு, ஜன. 02
இரு குழுக்களின் மோதலை தடுக்கச் சென்ற இளைஞன் கத் திக் குத்துக்கு உள்ளானார். இதன்போது, கத்தி வயிற்றில் சிக்கிய ஆபத்தான நிலையில் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மஸ்ஜிதில் நேற்று இடம்பெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தில் இரு இளைஞர் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது. இதன் போது அவர்களின் மோதலை தடுக்க இளைஞர் தலையிட் டுள்ளார்.

அப்போது ஒரு தரப்பிலி ருந்த நபர் மற்றொரு தரப்பில் இருந்தவரை கத்தியால் குத்தி யுள்ளார். இதன்போது, அந்தத் தாக்குதலை தடுக்க முனைந்த வரின் வயிற்றில் கத்தி ஏறியது டன், அவரின் வயிற்றுக்குள் புதையுண்டது.

இதையடுத்து இரு தரப்பின ரும் அவரை மருத்துவமனை யில் சேர்ப்பித்தனர். சத்திர சிகிச்சையின் மூலம் வயிற்றிலி ருந்த கத்தி அகற்றப்பட்டது.

# உயர்தர பரீட்சார்த்திகளுக்காக முசலியில் பரீட்சை நிலையம்!

மன்னார், ஜன. 02
க. பொ. த. உயர்தர பரீட் சைக்கு மன்னார், முசலி பிர தேசத்திலிருந்து தோற்றுவோ ருக்கான பரீட்சை நிலையம் முசலி முஸ்லிம் மகா வித்தியால யத்தில் (சிலாவத்துறை) நிறு வப்பட்டுள்ளது. இதுபற்றி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு கல்வி அமைச்சு ஏற்கனவே கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

உயர்தர பரீட்சைக்கான நிலையம் மன்னார் "பரியாரி கண்டல்" எனும் இடத்தில் நிறு வப்பட்டிருந்தது. இதனால், முசலியிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரம் பரீட்சார்த்திகள் பயணிக்க வேண்டியிருந்தது. போக்குவரத்து வசதியின்மை, பொருளாதார நெருக்கடி, இதர அசௌகரியங்கள் என்பன குறித்து முசலி பிரதேசத்தில் வசிக்கும் பரீட்சைக்கு தோற் றும் மாணவர்களின் பெற் றோர், ஆசிரியர்கள் மற்றும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர்கள், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை சந்தித்து முறை யிட்டிருந்தனர்.

இது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கல்வியமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்தில் பிரேரணை ஒன்றை சமர்ப்பித் தார். இது பற்றி ஆராயப்பட்ட தன் பின்னர், முசலி பிரதேசத் தில் வசித்து வரும் எதிர்வரும் க. பொ. த உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றும் பரீட் சார்த்திகள் முசலி முஸ்லிம் மகா வித்தியா லயத்தில் (சிலா வத்துறை) அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 06)

# சிபெற்கோ பெற்றோலை விட 3 ரூபாய் குறைத்தது சினோபெக்!

கொழும்பு, ஜன. 02
இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் (சிபெற்கோ) விலையை விட 3 ரூபாய் குறைவாக 92 ஒக்டைன் பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலை விற்பனை செய்வதற்கு சினோபெக் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 17 ரூபாயால் அதி கரித்து அதன் புதிய விலை 363 ரூபாயாகவும், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபா யால் அதிகரித்து 355 ரூபாயா கவும் விலையை நிர்ணயித் துள்ளது.

95 ஒக்ரைன் பெற்றோலின் விலை 38 ரூபாயால் அதிகரிக் கப்பட்டு 464 ரூபாயாகவும் சுப்பர் டீசல் லீற்றர் 41 ரூபா அதிகரிக்கப்பட்டு 475 ரூபா யாகவும் நிர்ணயிக்கப்பட்டுள் ளன. (ஐ)

# எருமைகளுக்கு உணவளிக்க சென்ற இளைஞர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 02
எருமைகளுக்கு உணவளிக்க ஏரிப் பகுதிக்கு சென்ற இளை ஞர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டார்.

மொனராகலை - தனமல் வில பிரதேசத்தை சேர்ந்த 19 வயது இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த இளைஞர் கடந்த 30 ஆம் திகதி மாலை ஏரிப்பகு திக்கு எருமைகளுக்கு உணவ ளிப் பதற்காக சென்றுள்ளார். இவர் வீடு திரும்பாததால் அவ ரின் வீட்டார் இது தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்தனர்.

பொலிஸாரின் தேடுதலில் திலகரத்ன ஏரியிலிருந்து அவ ரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தன மல்வில பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)



## நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடந்த உறுதியேற்பு!

நிந்தவூர், ஜன. 02

புதிய ஆண்டின் அரச அலுவலகங்களில் கடமை செயல்பாடுகளை ஆரம்பிக்கும் முதல் நாள் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம். அப்துல் லதீப் தலைமையில் நடைபெற்ற பிரதான வைபவத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்குபற்றி அரச சேவை உறுதியுரை செய்தனர்.

ஆரம்பத்தில் பிரதேச செயலாளர் அப்துல் லதீப் தேசிய கொடியை ஏற்றிவைத்து தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் இராணுவ வீரர்கள் உள்ளிட்ட நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த அனைவரையும் நினைவு கூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது அதே நேரம் பிரதேச செயலக பதவியணியின் அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் தமிழில் அரச சேவை உறுதியுரை சத்தியப்பிரமாணத்தை உரத்து வாசித்தனர்.

தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் பற்றியும் அந்த குறிக்கோள்களை அடைவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு பற்றியும் பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீப் நிகழ்வில் உரையாற்றினார். (ஐ - 06)

# வெள்ள அனர்த்தத்தால் கிழக்கில் 12,518 பேர் பாதிப்பு

**கொழும்பு, ஜன. 02**

**அதிக மழை வீழ்ச்சியால் ஏற்பட்ட வெள்ளத்தால் கிழக்கு மாகாணத்தில் 3ஆயிரத்து 811 குடும்பங்களை சேர்ந்த 12 ஆயிரத்து 518 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**



தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதேநேரம் திருகோணமலை - சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவின் மாவிலாறு அணைக்கட்டின் நான்கு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால், மாவிலாறு அணைக்கட்டை அண்டியுள்ள பல்லேவல வெளியிலுள்ள சுமார் 350 ஏக்கர் வேளாண்மை முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது.

அத்துடன், மாவிலாறு அணைக்கட்டுக்கு செல்லும் சுமார் 6 கிலோ மீற்றர் வீதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால், இந்த வீதியூடான தரைவழி போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த வீதியில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## அம்பாறையின் கடற்கரைகளில் இறைந்து கிடக்கும் பிளாஸ்ரிக்!

### அகற்றுமாறு மீனவர்கள் கோரிக்கை

கல்முனை, ஜன. 02

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாக பிளாஸ்ரிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவாக தென்படுவதைக் காண முடிந்தது.

குறிப்பாக அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக தற்காலிகமாக வெட்டப்பட்ட



கால்வாய்களால் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் பெரியநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவுகள் தேங்கிக் கிடக் கின்றன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடி தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுப்பதுடன் வலைகளிலும் சிக்கி வருகின்றன. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விட யத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-01)

# பேரம் பேசலாம் என்பது ஏமாற்றும் கருத்தாகும்!

### ஐக்கிய காங்கிரஸ் கட்சி

நிந்தவூர், ஜன. 02

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக இறக்கி, வெற்றி பெறக்கூடிய ஜனாதிபதி வேட்பாளரிடம் பேரம் பேசலாம் என்ற மனோ கணேசனின் கருத்து தேர்தல் சட்டங்களுக்கு முரண் என்பதுடன் தமிழ் மக்களை ஏமாற்றும் கருத்தாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தொலைக்காட்சி ஒன்றின் செவ்வியில் மனோ கணேசன் எம். பி. பேசும் போது இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் பேரம் பேசலாம் என தெரிவித்திருப்பதன் மூலம் அவருக்கு தேர்தல் அரசியல் சரியாகத் தெரியாது என்பது தெளிவாகிறது. இப்படித்தான் ஹிஸ்புல்லாவும் விசயம் புரியாமல் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வீண் செலவுகளை செய்தார்.

ஜனாதிபதி தேர்தலின் பின் ஒரு வேட்பாளரின் வாக்கு சீட்டிலுள்ள இரண்டாவது விருப்பு வாக்குகளை வைத்து எந்த வேட்பாளரிடமும் பேரம் பேச முடியாது என்பதே உண்மை. இரண்டாவது விருப்பு வாக்கு எண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த இரண்டாவது விருப்பு வாக்குகள் எந்த வேட்பாளரின் வாக்கு சீட்டிலிருந்து கிடைத்தது, எவ்வளவு கிடைத்தது என்பதை தேர்தல் திணைக்களம் பிரித்தறிந்து பகிரங்கமாக அறிவிக்காது என்பதை மனோ தெரிந்து கொள்ள வேண்டும்.

விருப்பு வாக்கு தேர்தல் முறைப்படியான பாராளுமன்ற தேர்தலிலும் ஒருவர் தனது வாக்கு சீட்டில் உள்ள மற்றவருக்கான விருப்பு வாக்கை பேரம் பேச முடியாது. தேர்தலுக்கு முன் ஒரு வேட்பாளரிடம் ஒப்பந்தம் செய்து அந்த வேட்பாளருக்கு மக்கள் நேரடியாகவே வாக்கு செலுத்த வைக்க முடியும்.

ஒரு வேட்பாளருக்கு வாக்களித்ததன் பின் அவரது வாக்கு சீட்டில் உள்ள இரண்டாவது விருப்பு வாக்கை இன்னொரு வேட்பாளருக்கு செலுத்துங்கள் என்று சொல்ல அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் பகிரங்கமாக பிரசாரமும் செய்யவும் முடியாது. அதேபோன்று தனது வாக்கு சீட்டிலுள்ள இரண்டாவது விருப்பு வாக்கை தனது அனுமதியில்லாமல் எண்ணவும் கூடாது. யாருக்கும் வழங்கவும் கூடாது என்றும் தேர்தல் திணைக்களத்துக்கு கட்டளையிடவும் முடியாது என்பதெல்லாம் தெரியாத ஒருவராக மனோ கணேசன்




இருப்பது தமிழ் பேசும் அரசியலுக்கு கேவலமாகும்.

ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களித்து விட்டு இன்னொரு வாக்கை மற்றுமொரு வேட்பாளருக்கு அளிக்கப்பட்டிருந்தால் முதல் வாக்கு பெற்றவருக்கு 50 வீதம் கிடைக்காத போது இரண்டாவது தேர்வில் அவருக்கு விருப்பு வாக்கு இருந்தால் அது முதல் வேட்பாளருக்குரிய வாக்கு என்பதால் அதுவும் அவருக்கு சேர்க்கப்படும். இதில் எத்தகைய பேரம் பேசலும் முடியாது, இதற்கு யாரும் தடைபோடவும் முடியாது.

அதனை பார்ப்பது தேர்தல் திணைக்களத்தின் வேலையாகும். அதனை எடுக்கவா இல்லையா என்றெல்லாம் கூட தேர்தல் திணைக்களம் யாரிடமும் கேட்காது. ஆகவே, ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை இனத்தவர் வேட்பாளராக இறங்கி தனக்கான வாக்குப்பலத்தை காட்ட முடியுமே தவிர பேரம் பேசுதல் என்பது இங்கு இல்லை என்பதே உண்மை - என்றுள்ளது. (ஐ-06)

## நிந்தவூர் பிரதேச சபையில் அரச சேவை உறுதியுரை!



நிந்தவூர், ஜன. 02

புதிய ஆண்டின் அரச அலுவலகங்களில் கடமை செயல்பாடுகளை ஆரம்பிக்கும் முதல் நாள் நிகழ்வு நிந்தவூர் பிரதேச சபையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி. ரி. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பிரதான வைபவத்தில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பங்குபற்றி அரச சேவை உறுதியுரை செய்தனர்.

ஆரம்பத்தில் பிரதேச சபை செயலாளர் திருமதி பரமேஸ்வரன் தேசிய கொடியை ஏற்றிவைத்தைத் தொடர்ந்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேநேரம் பிரதேச சபை பதவியணியின் அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் தமிழில் அரச சேவை உறுதியுரை சத்தியபிரமாணத்தை உரத்து வாசித்தனர்.

தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் பற்றியும் அந்த குறிக்கோள்களை அடைவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு பற்றியும் பிரதேச சபை செயலாளர் திருமதி பரமேஸ்வரன் நிகழ்வில் உரையாற்றினார். (ஐ-06)

# செங்கடலில் ஹூதி தீவிரவாதிகளின் 3 தாக்குதல் படகுகள் அழிக்கப்பட்டன!

## பென்ரகன் அறிவிப்பு



வாஷிங்டன், ஜன. 02

செங்கடலில் ஹூதிக்களின் மூன்று தாக்குதல் படகுகளை அமெரிக்க கடற்படை மூழ்கடித்திருப்ப தாகப் பென்ரகன் அறிவித்திருக்கிறது.

டென்மார்க் நாட்டின் பிரபல மெர்க்ஸ் சரக்குக் கப்பல் நிறுவனத்துக்கு சொந்தமான கப்பல் ஒன்றைத் தாக்கிக் கடத்தும் நோக்குடன் அதனை நெருங்கி வந்த படகுகள் மூன்றையே கடற்படையின் ஹெலிகள் தாக்கி அழித்துள்ளன என்று அமெரிக்கப் படைகளது மத்திய கட்டளைப் பீடம் நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

மெர்க்ஸ் நிறுவனத்தின் ஹாங்சோ என்ற கப்பலைக் கடத்தும் நோக்குடன் வந்த ஈரானிய ஆதரவு பெற்ற ஹூதி (Houthi) தீவிரவாதிகளின் நான்கு படகுகளில் மூன்றையே தாக்கி அழித்ததாக அமெரிக்கா கூறுகிறது. இந்தக் கப்பல் சிங்கப்பூரில் இருந்து எகிப்து நோக்கி சென்றுகொண்டிருந்த சமயத்திலேயே செங்கடலில் - மிக முக்கிய கடற் பாதையில் - தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு வெளியிட்டுவருகின்ற - ஈரானிய உதவி பெற்ற - யேமனியத் தீவிரவாத அமைப்பான ஹூதி இயக்கம் செங்கடல் வழியே செல்கின்ற - இஸ்ரேலுடன் தொடர்புடைய - கப்பல்கள் மீது கடந்த சில வாரங்களாக தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதனால் உலகின்மிக முக்கிய கடல்பாதை யைக் கடந்து செல்கின்ற சர்வதேச சரக்குக் கப்பல்களது பயணங்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு இலக்காகிவரு கின்றன. அதனால் கப்பல் நிறுவனங்கள் பலவும் செங் கடல் வழிப் பயணங்களை நிறுத்திவிட்டு வேறு மார்க்கங்களில் செல்லத் தொடங்கியுள்ளன. சில நிறுவ னங்கள் செங்கடல் ஊடான பயணக் கட்டணங்களை பல மடங்கு உயர்த்தியுள்ளன.

ஆசியாவை ஐரோப்பாவுடன் இணைக்கின்ற முக்கிய கடல்வழிப் பாதை செங்கடலில் அமைந் துள்ளது. யேமன் நாட்டுக்கு அருகே ஹூதி தீவிரவாதிகளது கட்டுப்பாட்டில் இருக்கின்ற பாப் அல்-மண்டப் ஜலசந்தியை கடந்தே கப்பல்கள் செங்கடலுக்குள் நுழைய வேண்டும். சர்வதேச கப்பல்கள் மத்திய தரைக் கடலை இணைக்கின்ற எகிப்தின் சுயஸ் கால்வாயை அடைவதற்குச் செங்கடலைக் கடக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

ஹூதி ஆயுததாரிகள் கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்த பாப் அல்-மண்டப் ஜலசந்தியில் வைத்தே வெளிநாட்டுக் கப்பல்களை தாக்கியும் கடத்தியும் வருகின்றனர். இதனால் ஆசியாவில் இருந்து செல்லும் கப்பல்கள் ஐரோப்பாவை சென்றடைவதற்காக சுயஸ் கால்வாயைத் தவிர்த்துவிட்டு நன்னம்பிக்கை முனை வழியே ஆபிரிக்காவைச் சுற்றி நீண்ட பயணம் செய்தே ஐரோப்பாவை சேரவேண்டியுள்ளது. இதனால் கப்பல் கொள்கலன் கட்டணங்களும் இதர செலவுகளும் அதிகரித்துள்ளன. (ஐ)




# அரியணையை துறந்தார் டென்மார்க்கின் மகாராணி!

கோபன்ஹேகன், ஜன. 02

டென்மார்க் நாட்டின் மகாராணி மார்கிரேத் பதவி துறப்பதாக அறிவித்திருக்கிறார். தனது முடியை அடுத்த தலைமுறையிடம் விட்டுச் செல்வதாக அவர் நேற்று முன்தினம் நாட்டுக்கு வழங்கிய புதுவருடச் செய்தியில் கூறியிருக்கிறார்.

52 வயதான மகாராணியின் பதவிவிலகலை அடுத்து அவரின் மகனும் முடிக்குரிய இளவரசருமாகிய ஃபிரடெரிக் அரசராக பதவியேற்கவுள்ளார். புதிய அரசரின் பதவியேற்பு ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 14, 1972 இல் அன்றைய மன்னரும் அவரது தந்தையுமான ஒன்பதாவது ஃபிரெடெரிக்கின் மறைவை அடுத்து நாட்டின் மகாராணியாக பதவியேற்றிருந்தார்.

உயிர்துறக்கும் வரை பதவியில் இருப்பேன் என்று அண்மைக்காலம் வரை கூறிவந்தவர். முடியை மகனிடம் கையளிப்பது என்ற அவரது திடீர் அறிவிப்பு புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் டெனிஷ் மக்களுக்குப் பரபரப்பான செய்தியாக அமைந்தது.

டென்மார்க் மகாராணியின் முடிவு கடந்த நான்கு தலைமுறைகளாக தொடர்ந்து வருகின்ற அரண்மனை பாரம்பரியத்துக்கு- ஒருவர் உயிர்துறக்கும் சமயத்திலேயே அடுத்தவர் முடியை ஏற்பது என்ற வழமைக்கு - மாறான ஒரு தீர்மானம் ஆகும்.

அண்மைக்காலத்தில் உடல்நிலையில் ஏற்பட்ட பாதிப்புகள், சத்திரசிகிச்சை என்பனவே மகாராணி அரச பதவி பொறுப்பை விட்டு விலகக் காரணம் என்று அரண்மனை தகவல்கள் கூறுகின்றன. மகாராணியின் பதவி விலகல் தொடர்பாகப் பிரதமர் மெற்ற ஃபிரெடெரிக்ஸனின் அலுவலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

மேன்மை தங்கிய மகாராணியின் சளைக்காத, அர்ப்பணிப்பு மிக்க நீண்ட சேவைக்காக நாட்டு மக்கள் அனைவரது சார்பிலும் மிகப்பெரும் நன்றியை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

# சிரியா மீதான தாக்குதலில் எண்மர் உயிரிழந்தனர்!

ஜெருசலேம், ஜன. 02

சிரியா மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் ஐவர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் 2 மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது. இப்போரில் ஹமாஸ் குழுவினருக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. மேலும், லெபனானில் ஹிஸ்புல்லா, ஏமனில் ஹவுதி உள்ளிட்ட கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

இதேபோல், சிரியாவில் பஷிர் அல் அசாத் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் அவரது ஆட்சிக்கு ஈரான் அரசு ஆதரவு அளித்து வருகிறது. அதேவேளை, ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள், ஆயுதக் குழுக்கள் சிரியா,யேமன், லெபனான் போன்ற நாடுகளில் இருந்தவாறு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், சிரியாவின் அலிப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 5 பேர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். (ஐ)





# நேற்றும் காஸாமீது தாக்குதல் 6 பொதுமக்கள் உயிரிழந்தனர்

## அகதி முகாமும் தாக்கப்பட்டது

காஸா, ஜன. 02

புத்தாண்டு நாளிலும் காஸாமீது இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளது. உலகம் முழுவதும் புத்தாண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், வடக்கு காஸாவின் ஜபாலியா பகுதியை நோக்கி இஸ்ரேல் இராணுவம் குண்டுமழை பொழிந்தது.

இஸ்ரேல் இராணுவத்தின் இந்த தாக்குதலில் 6 பேர் வரை உயிரிழந்தனர் என்று முதல் கட்ட தகவல்கள் வெளியாகின.

இதேபோன்று மத்திய காஸாவிலுள்ள மகாஸி முகாம் மீதும் இராணுவம் தாக்குதல் நடத்தியது. காஸாவில் வீடுகளை இழந்த மக்கள் மகாஸி முகாமில் அகதிகளாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், முகாம் மீது நடத்திய தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

பலஸ்தீனத்தின் காஸா எல்லைக்குட்பட்ட ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதல் போர் நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே. (ஐ)

# ஜப்பானில் தொடர் நிலநடுக்கம் சிறியளவில் சுனாமி தாக்கம்!

## 36 ஆயிரம் வீடுகளுக்கு மின் துண்டிப்பு



ரோக்கியோ, ஜன. 02

ஜப்பானின் வடகிழக்கு பகுதியில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் 7.5 ரிக்டரில் பதிவான நிலையில், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஜப்பானின் கடற்கரையோர நகரங்களான இஷிக்வா, நிகாடா, டொயாமா பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. நிலநடுக்கத்தின் மையப் பகுதியிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கடற் பகுதிகளில் மிக மோசமான சுனாமி அலைகள் தாக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து, ஒருசில பகுதிகளில் சிறிய அளவிலான சுனாமி அலைகள் தாக்கியுள்ளன. அந்நாட்டு நேரப்படி மாலை 4.21 மணி நிலப்படி, முதல் நிலநடுக்கம் ஏற்பட்டதும் இஷிக்வா பகுதியில் உள்ள வஜிமா துறைமுக பகுதியை முதல் சுனாமி அலை தாக்கியது. இது 4 அடி உயரம் இருந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஜப்பானில், காலை 7 மணி முதல், தொடர்ந்து நிலநடுக்கம் உணரப்பட்டு வருவதாகவும், ரிக்டர் அளவில் 4 புள்ளிகளுக்கு மேல் ஏற்பட் நிலநடுக்கம் 20 முறை பதிவாகியிருப்பதாகவும், ரிக்டர் அளவில் 5 புள்ளிகளுக்கு மேல் 7 முறை நிலநடுக்கம் பதிவாகியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர் நிலநடுக்கம் காரணமாக தீவிபத்துகள், நிலச்சரிவு உள்ளிட்ட ஆபத்துகள் நேரிடும் என்று ஜப்பான் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ஹோகுரிகு பகுதியில் சுமார் 36 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மிக முக்கிய சாலைகளில் விரிசல்கள் ஏற்பட்டு போக்குவரத்து முடங்கியிருக்கிறது. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ஜப்பான் தலைமை அமைச்சரவை செயலாளர் அறிவுறுத்தியிருக்கிறார். (ஐ)

# இந்த ஆண்டில் 25 பொது விடுமுறை

கொழும்பு, ஜன. 02

2024ஆம் ஆண்டில் 25 பொது விடுமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தகவல் வெளியிட்டுள்ளது.

4 நாட்கள் விடுமுறையோடு அதிகபட்ச விடுமுறைகளை கொண்ட மாதமாக ஏப்ரல் மாதம் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், ஜனவரி மாதத்தில் 15மற்றும் 25ஆம் திகதிகள், பிப்ரவரி மாதத்தில் 04 மற்றும் 23ஆம் திகதிகள், மார்ச் மாதத்தில் 08, 24 மற்றும் 29ஆம் திகதிகள், ஏப்ரல் மாதத்தில் 11, 12, 13மற்றும் 23ஆம் திகதிகள், மே மாதத்தில் 01, 23 மற்றும் 24ஆம் திகதிகள், ஜூன் மாதத்தில் 17மற்றும் 21ஆம் திகதிகள், ஜூலை மாதத்தில் 20ஆம் திகதி, ஓகஸ்ட் மாதத்தில் 19ஆம் திகதி, செப்ரெம்பர் மாதத்தில் 16 மற்றும்17ஆம் திகதிகள், ஒக்ரோபர் 31ஆம் திகதி, நவம்பர் 15ஆம் திகதி, டிசெம்பர் 14 மற்றும் 25ஆம் திகதிகள் என்பன பொது விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பெரமுனவின் ஷான் விஜயலால் எம். பி. ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார்!

கொழும்பு, ஜன. 02

**சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார்.**

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை அவர் கட்சியில் இணைந்தார்**



ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த ஷான் விஜயலால் டி சில்வாவுக்கு அம்பலாங்கொடை தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

ஷான் விஜயலால் டி சில்வா சிறீ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினராவார். அந்தக் கட்சியின் அம்பலாங்கொடை தொகுதி பிரதம அமைப்பாளராகவும் அவர் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெரமுனவின் தீர்மானத்தைமீறி ஜனாதிபதி செயல்பட முடியாது!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜன. 02

"சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது. எமது பொதுஜன பெரமுனவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தது. எனவே, எமது கட்சியை ஒதுக்கிவிட்டு அல்லது எமது கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி செயல்பட முடியாது."

- இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி தான் நினைத்த மாதிரி செயல்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும். எமது கட்சியின் ஆதரவை அவர் இழக்க நேரிடும். இந்த அரசை அவர் முன்கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும். ஒட்டுமொத்தத்தில் அவர் பழைய ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

இதை அவருக்கு நாம் புரிய வைக்கத் தேவையில்லை. அவரே புரிந்துகொண்டு செயல்படுவார் என்று நம்புகின்றோம். என்னதான் இருந்தாலும் புதிய ஆண்டில் இரண்டு பிரதான தேர்தல்களை ஜனாதிபதி நடத்தியே ஆக வேண்டும். தேசிய தேர்தல்களை பிற்போட எமது கட்சி இடமளிக்கமாட்டாது. நடைபெறவுள்ள இரண்டு பிரதான தேர்தல்களிலும் எமது பொதுஜன பெரமுன கட்சியே வெற்றிவாகை சூடும். ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் யார் என்ற தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை." - என்றார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 02

இனந்தெரியாத நபரின் துப்பாக்கி சூட்டில் 48 வயதுடைய நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பு - வெல்லம்பிட்டி - சேதவத்தையில் நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டுக்கு முன்பாக அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கி சூட்டை நடத்தினார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் சந்தேகநபர் வேறு ஒருவருடன் சைக்கிளில் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

வெல்லம்பிட்டி - சேதவத்தை பிரதேசத்தில் வசிக்கும் நபர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அம்மைநோய் தடுப்பூசி ஏற்றல் ஆறாம் திகதி ஆரம்பமாகிறது!

கொழும்பு, ஜன. 02

குழந்தைகளுக்கு அம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட 9 மாவட்டங்களில் அம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த திட்டம் வரும் 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4மணிவரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மை நோயாளர்கள் அதிகமாக பதிவாகியுள்ள 9 மாவட்டங்களான யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, குருநாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் நடைமுறைபடுத்தப்படவுள்ளது. (ஐ)





2024 புதுவருடத்தை கொழும்பு - காலிமுகத்திடல் மைதானத்தில் வரவேற்கத் திரண்டிருந்த பொது மக்கள்...!

# 24 மணி நேரத்தில் 1,229 பேர் கைது!



கொழும்ப, ஜன. 02

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நிறைவடைந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்து 229 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்களிடமிருந்து 440 கிராம் ஹெரோயின், 260 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள் மற்றும் 417 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதிவு மூன்று இலட்சத்தை எட்டுகிறது!

கொழும்பு, ஜன. 02

2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதிவுகள் 2 இலட்சத்து 97 ஆயிரத்தை கடந்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக மொத்தம் 2 இலட்சத்து 97 ஆயிரத்து 100 பதிவுகள் கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

2024 ஜனவரி முதலாம் திகதி காலை 07.01 மணி நிலவரப்படி இந்த புள்ளிவிபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ஐ)

## சங்கிலியன்...

படிப்படியாக பூங்காவை மேம்படுத்த உள்ளதாகவும் தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரைக்கும் பொது மக்களின் பயன்பாட்டுக்காக குறித்த பொழுதுபோக்கு இந்த மையம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

பொதுமக்கள் குறித்த பொழுது போக்கு மையத்தை தற்போது இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். காலப்போக்கில் கட்டணங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்படும் எனவும் யாழ். மாநகர சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விற்பனையாளர்...

குணரத்ன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தற்போது மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான விசேட நடவடிக்கை வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் நுகர்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கையால் வடக்கில் 90 சதவீத குற்றச் செயல்கள் சடுதியாகக் குறைந்துள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் தொடர்புடையவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப் படுவார்கள். என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் செயற்பாடுகளை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளனர். அதற்குரிய நடவடிக்கைகள் வடக்கிலும் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை செய்வோர் தொடர்பாக 0718598834 (யாழ்ப்பாணம்), 0718598835 (காங்கேசன்துறை), 0718598836 (வவுனியா), 0718598837 (மன்னார்), 0718598838 (கிளிநொச்சி), 0718598839 (முல்லைத்தீவு) என்ற இலக்கங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்த இலக்கங்களுக்கு அழைப்பெடுப்பவர்களின் விவரங்கள் தெரியவராது. அதனால் அச்சமின்றி தகவல்லை வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் காங்கேசன்துறையில் உள்ள வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலும் நேரடியாக முறையிடலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## போதைப்...

போதை மருந்தேற்ற பயன்படுத் தப்படும் ஊசிகள் என்பன கைப்பற்றப் பட்டன.

கோண்டாவிலில் நேற்று திங்கட்கிழமை போதைப்பொருள் விற்பனை சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 50 ஆயிரம் ரூபாய் பணம் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து அவரின் வீடு கோப்பாய் பொலிஸார் மற்றும் மோப்ப நாய் சகிதம் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவத்தில், 24 மற்றும் 21 வயதான இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் கைதானவர்களில் ஒருவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பொருள்களின்...

ஐ.ஓ.சி., சினோபெக் ஆகிய நிறுவனங்களும் இந்த விலை அதிகரிப்பை செய்தபோதும், சினொபெக் பெற்றோல், டீசலுக்கு 3 ரூபாய் சலுகை அளித்துள்ளது.

**எரிவாயு**

லிற்றோ எரிவாயு நிறுவனம் 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலையை 685 ரூபாயால் அதிகரித்து 4,250 ரூபாயாக நிர்ணயித்துள்ளது. இதேபோன்று, 5 கிலோ எரிவாயு சிலிண்டர் 276 ரூபாய் உயர்ந்து 1,707 ரூபாயாகவும் 2.3 கிலோ எரிவாயு சிலிண்டர் விலை 127 ரூபாயால் அதிகரித்து 795 ரூபாயாக நிர்ணிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று லாப்ஸ் எரிவாயு நிறுவனம் 12.5 கிலோ எரிவாயுவை 755 ரூபாயால் உயர்த்தி 4,740 ரூபாயாகவும் 5 கிலோ எரிவாயுவை 305 ரூபாய் உயர்த்தி 1900 ரூபாயாகவும் நிர்ணயித்துள்ளது.

**சிகரெட்**

சிகரெட்டின் விலை 5 ரூபாய், 15 ரூபாய், 25 ரூபாய் என மூன்று வகைகளில் அதிகரிக்கப்பட்டது.

**மதுபானம்**

750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 250 ரூபாய் முதல் 350 ரூபாயால் உயர்ந்தது. அத்துடன், பியர் போத்தல் 60 முதல் 70 ரூபாயால் விலை உயர்ந்தன.

வற்வரி உயர்வால், 750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 90 ரூபாய் உயர்கிறது. இதேபோல், 375 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 50 ரூபாயாலும், 180 மில்லிலீற்றர் போத்தல் ஒன்று 20 ரூபாயாலும் அதிகரித்துள்ளன.

எரிபொருள்களின் விலை உயர்வால் பாடசாலை வான் சேவை, முச்சக்கர வண்டி சேவைகளின் கட்டணங்களும் உயர்வடைந்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினமும் உணவு, கைபேசிகள் தொலைபேசி, இணைய கட்டணங்கள் என்பன அதிகரித்தன. வற்வரியால் 76 பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மற்றும் கட்டணங்கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெருந்தோட்ட...

உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டிருந்தனர் என்று அறிய வந்தது.

இதனையடுத்து மேற்படி இரு அமைப்புகளாலும் கடந்த ஆண்டு மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட பயிர் செய்கை மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் மதிப்பீட்டு ஆய்வில் 17 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டது. இது கடந்த ஆண்டுடன் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றும் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஆண்டு மார்ச்சில் 8,741 குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வின் பிரகாரம் 24 சதவீதமான குடும்பங்கள் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் கொண்டன.

பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகங்களை சேர்ந்த குடும்பங்கள் நாளாந்தம் உட்கொள்ளும் உணவின் அளவை குறைத்தமையே இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. இதேபோன்று கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் உணவு சார்ந்த மாற்று உத்திகளை கையாளும் குடும்பங்களின் எண்ணிக்கை 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

மேலும், பெருந்தோட்டப் பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்பதுடன், நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகளவானோர் உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வற்வரி...

வழங்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2023 மூன்றாம் காலாண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சி வேகமானது நேர்மறையாகியுள்ளது. அதற்கமைய 2022இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி வேகம் 2023இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தால் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 220 மில்லியன் டொலர் மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 250 மில்லியன் டொலர் என்பவற்றுடன் தற்போது 400 கோடி டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பைப் பேண முடியும் என்ற இலக்கை அண்மித்துள்ளோம்.

அந்த வகையில் இவ்வருடம் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும். இதே வேளை, 2026இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை குறைப்பதற்காக "அஸ்வெசும" நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கையை அதகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## ஒன்றிணைந்த...

தலைவர் சஜித் பிரேமதாஸவும், சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகபெருமவுக்கும் இடையிலான அரசியல் தொடர்பு கடந்த ஆண்டு ஜூலை 20ஆம் திகதி ஆரம்பமானது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகபெருமவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிந்தார். அதனை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ. எல். பீரிஸ் வழிமொழிந்தார்.

பீரிஸ் பொதுஜன பெரமுனவின் தீர்மானத்துக்கு அமைய அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியிருந்தால் அவர்தான் பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பார்.

இடைக்கால ஜனாதிபதி தேர்தலில் டலஸ் அழகபெரும வெற்றிப் பெற்றிருந்தால் சஜித் பிரேமதாஸ பிரதமராக பதவியேற்றிருப்பார். பெரும்பான்மை பலம் பொதுஜன பெரமுன பக்கம் உள்ளதால் அவர்கள் வெற்றிபெற்றார்கள்.

பாராளுமன்றத்திலும்,வெளியிலும் அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் தரப்பினருடன் இணக்கமாக செயல்படுகிறோம். இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக குறிப்பிடப்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தேர்தல்களையும் பிற்போடுவது ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆகவே அரசாங்கத்துக்கு எதிரான பலமான சக்தியை நாங்கள் உருவாக்குவோம்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஒன்றிணைந்த எதிரணி கூட்டணியை வெகுவிரைவில் நிறுவுவோம். கூட்டணியின் பொது வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை களமிறக்குவோம். சஜித் - டலஸ் அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது - என்றார். (ஐ)

## இரு...

நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது, இரு சிறார்களையும் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் தடுத்து வைக்குமாறும் இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## பெரமுனவுடன்...

இருக்கும் என்று நான் நம்புகின்றேன். தேவையேற்படின் ஜனாதிபதி பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைக்கூட நடத்தலாம். பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாகவுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பே முதலில் வெளியாகும் என்பது எனது நிலைப்பாடாகும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகளில் போட்டியிட்டு ஆனால், தற்போது அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தாத 71 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அந்த 71 பேரை உள்ளடக்கியே புதிய கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய பாராளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணியை எம்மால் நிறுவ முடியும்.

இன்றிலிருந்து எமது புதிய கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். ஜனாதிபதி தேர்தலின் போது பரந்த அணியாக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் வகையில் எமது அணி பலமான அணியாக செயல்பட்டு வருகின்றது.

உண்மைகளையும் பொய்களையும் மக்களுக்கு கூறும் உண்மைக்கும் பொய்க்கும் இடையில் தேர்தல் வரவுள்ளது. எந்தவொரு கட்சிக்கும் வாக்குறுதிகளை வழங்க முடியும். ஆனால் அவை அனைத்தையும் நிறைவேற்ற முடியாது. பணத்தை மரத்திலிருந்து பறிக்க முடியாது. இன்றிலிருந்து பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். மக்கள் தூற்றுவார்கள் என்பதை ஜனாதிபதியும், அரசாங்கமும் நன்கு அறிவர். மக்கள் எவ்வளவு விமர்சித்தாலும் உண்மைகளையும், யதார்த்தத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ வந்து வரிகளை குறைத்த பின்னர் என்ன நடந்தது? அது அனைவருக்கும் நன்றாக இருந்தது. ஆனால், அதன் பின்னர் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியவில்லை. எமது பயணம் பொருளாதார திட்டத்துடன் கூடியதாகும். ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டங்களும் சிறப்பாகக் காணப்படுவதால் நாம் அவரை ஆதரிக்க தீர்மானித்துள்ளோம். பொருளாதாரத்தை வலுப்படுத் துவதாயின் மக்களுக்கு சார்பான முடிவுகளை எடுப்பது கடினமாகும்.

இது கடினம் என்றாலும், இந்த உண்மையை நாம் எற்றுக் கொள்ள வேண்டும். நாம் இன்றிலிருந்து மக்களுக்கு உண்மைகளைக் கூறுவோம்.

இந்தக் கூட்டணி சிறீலங்கா பொதுஜன பெரமுனவுடன் நிற்காது என்பதை நாம் தெளிவாகக் கூறுகின் றோம். நாலக கொடஹேவா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலது கரம் போன்றவர். அந்த சந்தர்ப்பத்தில் வரியைக் குறைக்க வேண்டாம் என்று வழங்கிய ஆலோசனைகளை அவர் கேட்கவில்லை. தற்போது அவருக்கு என்னவானது? அரசியல் சார்பற்ற ஒருவரை ஜனாதிபதியாக்குவதாகக் கூறி நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளனர். பொதுஜன பெரமுனவினாலோ, ஐக்கிய மக்கள் சக்தியாலோ ஆயிரக்கணக்கான மக்களை அழைத்து கூட்டங்களை நடத்த முடியாது.

தற்போது கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் ஜே.வி.பிக்கும் நாம் சவாலான கூட்டணியாக இருப்போம். மக்களுக்கு உண்மைகளை எடுத்துரைத்து 22 தேர்தல் மாவட்டங்களிலும் வெற்றி பெறக் கூடிய பலம் மிக்க கூட்டணியாக நாம் வலுப்பெறுவோம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# பேருந்து கட்டணத்தை அதிகரிக்க தேவையில்லை!

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 02

**எரிபொருள் விலையேற்றத்துக்கமைய பேருந்துக் கட்டணத்தை திருத்தம் செய்யவேண்டிய தேவை தற்போது இல்லை. ஆகவே, பேருந்து கட்டணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

எரிபொருள் விலையேற்றத்துக்கு அமைய பேருந்து கட்டணத்தை 20 முதல் 30 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கையை தொடர்ந்து ஆணைக்குழு இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு,

2002.06.12 ஆம் திகதி அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தேசிய பேருந்து கட்டண கொள்கைக்கு அமைய 2002 ஜூலை மாதம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் பேருந்து கட்டணம் திருத்தம் செய்யப்படுகிறது.

அந்த பேருந்து கட்டண கொள்கைக்கமைய வருடாந்த பேருந்து கட்டண திருத்தம் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதலாம் திகதி அறிவிக்கப்படும். அத்துடன், வருடத்தில் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் டீசலின் விலை சடுதியாக உயர்வடைந்தால் அந்த விலை உயர்வு மொத்த கிலோமீற்றர் ஓர் அலகுக்கான செலவு 4 சதவீதத்தை காட்டிலும் உயர்வடைந்தால் டீசல் விலை அதிகரிக்கப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் இடைக்கால கட்டண திருத்தம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

நடைமுறையில் உள்ள பேருந்து கட்டணம் 2023.09.03 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டது. முன்னெடுக்கப்பட்ட மதிப்பாய்வுகளுக்கு அமைய 2023.09.01 ஆம் திகதி காலப்பகுதியில் ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலின் விலை 341 ரூபாவாக இருந்தது.

2024.01.01 ஆம் திகதி அதிகாலை எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டு ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 358 ரூபாவாக புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய பேருந்து கட்டண கொள்கைக்கு அமைய மொத்த கிலோ மீற்றருக்கான பயணத் தூரம் நூற்றுக்கு 2.0 சதவீதத்தால் உயர்வடைய வேண்டும். ஆகவே தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் விலைக்கு அமைய பேருந்து கட்டணத்தை திருத்தம் செய்ய வேண்டிய தேவை தற்போது இல்லை. ஆகவே பேருந்து கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது. (ஐ)

# கட்டைக்காட்டில் நேற்று மீனவரின் வாடி எரிப்பு!



வடமராட்சி, ஜன. 02

கட்டைக்காட்டில் மீனவர் ஒருவரின் வாடி எரிக்கப்பட்டது. இதில், 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

புதுவருடக் கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபட்டு கொண்டிருந்தபோது வாடி எரிவதைக் கண்டு ஓடிச் சென்று அணைத்தனர். எனினும், அதற்குள்ளாக பெரும் பகுதி தீயில் எரிந்து நாசமானது.

இந்த சம்பவத்தில், செல்வரத்தினம் சுதர்சன் என்பவரின் வாடியே எரியூட்டப்பட்டது. அங்கிருந்த பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளும் தீயில் எரிந்து நாசமாகின.

முன்பகை காரணமாகவே வாடியை எரியூட்டப்பட்டதாக ஒருவர் மீது அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாகத்தான் முன்னர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், வாடி எரியூட்டப்பட்டது தொடர்பில் மருதங்கேணி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (ஐ-02)

# ஐஸ் கட்டி விலையும் உயர்வு



கொழும்பு, ஜன. 02

மீன்கள் பழுதடையாமல் பயன்படுத்தப்படும் ஐஸ்கட்டிகளின் விலை 100 ரூபாயால் அதிகரிக்கப்படும் என்று ஐஸ் கட்டி உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

600 ரூபாயாக இருந்த ஒரு கிலோ ஐஸ் கட்டியின் விலை 700 ரூபாயாக அதிகரிக்கப்படுகின்றது என்றும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

வற் வரி அதிகரிப்பு காரணமாக நேற்று திங்கட்கிழமை முதல் ஐஸ்கட்டியின் விலை அதிகரிக்கப்பட்டது. (ஐ)

# வற் வரி அதிகரிப்பால் ஏற்படும் பாதிப்பை குறைக்க நடவடிக்கை!

## ஜனாதிபதி எடுக்கிறார் என்கிறது ஐ. தே. க.

கொழும்பு, ஜன. 02

அதிகரிக்கப்பட்டிருக்கும் வற் வரி தொடர்பில் மக்கள் குழப்பமடைய தேவையில்லை. மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கையை ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதற்காக மக்கள் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நூற்றுக்கு 15வீதமாக இருந்த வற் வரி ஜனவரி முதல் நூற்றுக்கு 18வீதமாக அதிகரிக்கப்படுகிறது. இதனால் மக்களுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இந்த கஷ்டத்தை அனைவரும் சிறிது காலத்துக்காவது ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

இதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற அழுத்தத்தை குறைப்பதற்கு சில நிவாரண நடவடிக்கைகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், வற் வரி அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி பொய் பிரசாரம் மேற்கொண்டு மக்களை குழப்பி வருகிறது. இது தொடர்பில் மக்கள் குழப்பமடைய தேவையில்லை. மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களுக்கான வரி அதிகரிப்பை இல்லாமல் செய்வது தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மக்களை கஷ்டப்படுத்த ஜனாதிபதிக்கோ அரசாங்கத்துக்கோ விருப்பம் இல்லை. என்றாலும் சிறிது காலத்துக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் இந்த பிரச்னைக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மேலும், வற் வரி அதிகரிப்பின் மூலம் ஒரு குடும்பத்துக்கு 40 ஆயிரம் ரூபாய் மேலதிக செலவு ஏற்படுவதாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை. தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் வரியில் இருந்து மருந்து பொருட்கள் உள்ளிட்ட 65 பொருட்களை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அத்துடன் நாட்டின் தேசிய வருமானம் 2023இல் 3 இலட்சம் கோடி ரூபாயை தாண்டி இருக்கிறது. அதேநேரம் அரச அடிப்படை கணக்குகளில் மேலதிக நிலுவை ஏற்பட்டிருக்கிறது. இதேபோன்று பல வருடங்களுக்கு பின்னர் வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி முதல் காலாண்டுக்கு ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்துக்கும் ஜனாதிபதியின் சிறந்த நிதி முகாமைத்துவமே காரணமாகும்.

கடந்த 25 வருடங்களாக நாட்டின் தலைவர்களாக இருந்து மேற்கொண்ட விடயங்களையும் கடந்த ஒன்றரை வருட காலத்தில் ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைவராக இருந்து மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு பார்க்கையில், வித்தியாசத்தை புத்தியுள்ள மக்கள் விளங்கிக் கொள்வார்கள் - என்றார். (ஐ)





2024ஆம் ஆண்டு புத்தாண்டை வரவேற்கும் முகமாக நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் திங்கள் நள்ளிரவு 12.00 மணிக்கு தீபங்கள் ஏற்றப்பட்டன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சரக்கு கப்பலை தாக்கிய ஹூதிக்களை நடுக்கடலில் மூழ்கடித்த அமெரிக்கா!

செங்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்றில் ஏற முயன்ற ஹூதி குழுவின் சிறு படகுகளை தாக்கி அழித்துள்ளது அமெரிக்க கடற்படை.

ஜேமனில் உள்ள ஹூதிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து நான்கு படகுகள் மார்ஸ்க் ஹாங்சோ என்ற சரக்கு கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய தாகவும், பின்னர் அதை கைப்பற்ற அருகில் வந்ததாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.



இந்நிலையில் அருகிலிருந்து அமெரிக்க போர்க்கப்பலின் ஹெலிகாப்டர்களுக்கு இதுகுறித்து அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பின் பேரில் ஹூதி கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க கடற்படை "தற்காப்புக்காக" மூன்று படகுகளை முழ்கடித்துள்ளது.

இதில் அந்த படகுகளில் இருந்த அனைவரும் கொல்லப்பட்டனர். நான்காவதாக வந்த படகு தப்பித்து விட்டது.

முக்கியமான கடல்பாதையான செங்கடல் பகுதியில் பயணம் செய்யும் கப்பல்கள் மீது நவம்பர் மாதத்தில் இருந்து நூற்றுக்கணக்கான டிரோன் தாக்குதல்கள் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது ஹூதி குழு.

ஈரான் ஆதரவு பெற்ற ஜேமன் கிளர்ச்சி குழுவான ஹூத்திக்கள் காஸா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேலை சேர்ந்த கப்பல்களை மட்டுமே தாக்குவதாக அறிவித்திருந்தது.

தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள வணிகக் கப்பலான, மார்ஸ்க் ஹாங்சோ சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட ஒரு டேனிஷ் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல் என்று சென்ட்காம் (Centcom) தெரிவித்துள்ளது.

உலகில் மிகப்பெரிய கப்பல் நிறுவனங்களில் ஒன்றான மார்ஸ்க், அடுத்த 48



மணிநேரத்திற்கு செங்கடல் பகுதியில் தனது கப்பல்கள் செல்வதை நிறுத்தியுள்ளது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் இந்த பகுதியில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் திட்டத்தை அறிவித்த பிறகு, சமீபத்தில் தான் இந்நிறுவனம் இந்த கடல் பாதையை மீண்டும் பயன்படுத்த தொடங்கியிருந்தது.

முன்னதாக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் காரணமாக இந் நிறுவனத்தின் கப்பல்கள் மிக நீளமான பாதையான ஆப்ரிக்காவின் நன்னம்பிக்கை முனை வழியாக திருப்பி விடப்பட்டிருந்தன.

ஜேமன் நேரப்படி நான்கு ஹூத்தி படகுகள் 6:30 மணியளவில் (03:30 புஆவு) சிறிய ஆயுதங்கள் மற்றும் ஆயுதங்கள் நிரப்பப்பட்ட கப்பலோடு வந்து குறிப்பிட்ட கப்பலை தாக்கியுள்ளனர். அந்த கப்பலுக்கு 20மீ (66 அடி) அருகில் சென்று, அதில் ஏற முயன்றுள்ளனர். இதனால், மார்ஸ்க் கப்பலின் பணியாளர்கள் அவசர அழைப்பு விடுத்ததை அடுத்து அங்கு சென்ற அமெரிக்க கடற்படையினர், கிளர்ச்சிக்குழு படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சென்ட்காம் தெரிவித்துள்ளது.

உதவிக்கான அழைப்பு வந்ததும் அருகிலிருந்த யுஎஸ்எஸ் ஐசன்ஹோவர் விமானம் தாங்கி கப்பல் மற்றும் யுஎஸ்எஸ் கிரேவ்லி டிஸ்டிராயர் ஹெலிகாப்டர்கள் சம்பவ இடத்திற்கு உடனே சென்றுள்ளன. முதலில் இந்த ஹெலிகாப்டர்கள் மூலம் அந்த சிறிய படகுகளுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அவர்கள் ஹெலிகாப்டரை நோக்கியும் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

இதனால் தற்காப்புக்காக மீண்டும் ஹெலிகாப்டர்கள் அந்த படகுகள் மீது துப்பாக்கிசூடு நடத்தியதில், மூன்று படகுகள் முழுமையாக தண்ணீரில் மூழ்கினர். அதிலிருந்த குழுவினர் மொத்தமாக இறந்து போயினர் என்று சென்ட்காம் தெரிவித்துள்ளது. மேலும் நான்காவது படகு தப்பித்து விட்டதாகவும், அமெரிக்க வீரர்கள் மற்றும் உபகரணங்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இது கடந்த 24 மணிநேரத்தில் மார்ஸ்க் ஹாங்சோ மீது நடந்த இரண்டாவது தாக்குதலாகும். சனிக் கிழமை அதன் மீது ஏவுகணை தாக்குதலுக்கு குறி வைக்கப்பட்டது.

சென்ட்காமின் முந்தைய அறிக்கையின்படி, ஹூதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் ஏவப்பட்டன. அப்போது டிஸ்டிராயர் கிரேவ்லி மற்றும் லாபூன் எதிர்த்தாக்குதல் நடத்தின.

டிசம்பர் 18 அன்று உலகளாவிய ரோந்து தொடங்கப்பட்ட பின்னர் இந்த ஏவுகணை தாக்குதலே முதல் வெற்றிகரமான எதிர் தாக்குதலாகும் என்று ஏபி செய்தி முகமையிடம் கூறியுள்ளார் அமெரிக்க கடற்படை அட்மிரல்.

அவசர கால அழைப்புக்கு உதவ சென்றிருந்தபோது, ஹூதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இரண்டு கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் மீது ஏவப்பட்டதாக சென்ட்காம் தெரிவித்துள்ளது.

அனுப்பப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகளை யுஎஸ்எஸ் கிரேவ்லி அழித்ததாக சென்ட்காம் கூறியுள்ளது. மேலும், நவம்பர் 19இலிருந்து சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்பட்ட 23ஆவது தாக்குதல் இது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

"மார்ஸ்க் ஹாங்சோ கப்பல் கடலில் பயணிக்கும் தகுதியோடு இருப்பதாகவும், எந்த சேதங்களும் அதில் இல்லை" என்றும் கூறியுள்ளது சென்ட்காம்.

இது இல்லாமல் தனியாக, யுனைடெட் கிங்டம் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் (யுகேஎம்டிஓ) அமைப்பு ஜேமன் துறைமுகமான ஹொடைடாவின் தென்மேற்கு செங்கடலில் 55 கடல் மைல் (101 கிமீ) தொலைவில் ஒரு சம்பவத்தைப் புகார் செய்துள்ளது.

அடையாளம் தெரியாத கப்பல் ஒன்று "கப்பலின் முனையில் அதிக சத்தத்துடன் கூடிய வெளிச்சத்தை உருவாக்கியதாகவும்" மற்றும் எதையோ வெடித்தாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதில் எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும், அனைத்து குழு உறுப்பினர்களும் பத்திரமாக இருக்கிறார்கள் என்றும், கப்பல் அருகிலுள்ள துறை முகத்திற்கு சென்று விட்டதாகவும் அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



பல வாரங்களாக ஹூத்தி தாக்குதல் கள் அதிகரித்துள்ளதால், மார்ஸ்க் உள்ளிட்ட பல கப்பல் நிறுவனங்கள் செங்கடலில் இருந்து தங்கள் கப்பல்களை திசைதிருப்பி, அதற்கு பதிலாக ஆப்பிரிக்காவை சுற்றி பயணிக்கும் நிர்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. மத்திய தரைக் கடலை இணைக்கும் எகிப்தில் உள்ள சூயஸ் கால்வாயை அடைய கப்பல்கள் ஏமனில் ஹூதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் கடற் கரைக்கு அப்பால் உள்ள சிறிய பாப் அல்-மண்டப் ஜலசந்தி வழியாகச் செல்ல வேண்டும்.

ஈரான் ஆதரவு கிளர்ச்சி குழுவான ஹூத்திக்கள் முதலில் இஸ்ரேல் போரை நிறுத்த வைக்கும் முயற்சியாக, காஸா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல் சார்ந்த கப்பல்களை மட்டுமே தாக்குவதாக அறிவித்திருந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் கேமரூன் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர் "ஹூத்திக்களுக்கு நீண்டகால ஆதரவை வழங்கி வருவதால், இந்தத் தாக்குதல்களைத் தடுக்கும் பொறுப்பை தெஹ்ரானும் பகிர்ந்து கொள்கிறது" என்று ஈரானின் வெளியுறவு அமைச்சரிடம் கூறியதாக தெரிவித்துள்ளார்.

ஏபி செய்தி முகமையின் நேர்காணலில் பேசியுள்ள அமெரிக்க கடற்படை துணை அட்மிரல் பிராட் கூப்பர், ஹூத்திகள் அவர்களின் மோசமான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வருவது போல் தெரியவில்லை. அவர்களை எதிர்த்துப் போரிடவே புதிய கடல்சார் சிறப்புக்குழு வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக டிசம்பரில், இந்த பிராந்தியத்தில் கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச கூட்டணியை அமெரிக்கா ஆபரேஷன் ப்ராஸ்பெரிட்டி கார்டியன் என்ற பெயரில் தொடங்கியது.

இந்த பாதுகாப்பு நடவடிக்கை அமல்படுத்தப்பட்டதில் இருந்து செங்கடல் பகுதியில் 1200 வணிக கப்பல்கள் பயணித்துள்ளதாகவும், சனிக்கிழமை வரை இதில் எந்த கப்பல் மீதும் டிரோன் அல்லது ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் துணை அட்மிரல் கூப்பர்.

சர்வதேச பாதுகாப்பு படையை அறிவித்ததில் இருந்து, ஹூதிக்கள் நவம்பர் மாதம் முதல் 100 டிரோன் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை கூறியுள்ளது. இதில் 35 க்கும் மேற்பட்ட வெவ்வேறு நாடுகளுடன் இணைக்கப்பட்ட 10 வணிக கப்பல்கள் குறி வைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் சந்தைகளை ஆசியாவுடன் இணைக்கும் உலகின் மிக முக்கியமான கப்பல் பாதைகளில் ஒன்று இந்த செங்கடல்.

மத்திய கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கான மிக முக்கியமான வழிகளில் இதுவும் ஒன்று என்பதால், இந்த தாக்குதல்களால் இவை அனைத்தின் விலைகளும் உயரக் கூடும் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.



# மாற்று சூயஸ் கால்வாய் - இஸ்ரேலில் பென் குரியன் திட்டம்: அணுகுண்டின் மூலம் அமெரிக்கா திறக்கவிருந்த கால்வாய்?

சூயஸ் கால்வாக்கு மாற்றாக 1960 களில் முன்மொழியப்பட்ட சர்ச்சைக்குரிய பென் குரியன் கால்வாய் திட்டமானது, இஸ்ரேலின் ஸ்தாபக தந்தை டேவிட் பென்-குரியன் (David Ben-Gurion:1886–1973) பெயரிடப்பட்ட திட்டமாகும். 1960களின் பிற்பகுதியில் உருவான, ஐரோப்பா மற்றும் ஆசியாவை இணைக்கும் முதன்மையான கப்பல் பாதையான சூயஸ் கால்வாக்கு மாற்று வழியை பென் குரியன் திட்டம் உருவாக்க முயன்றது.

**செங்கடலில் ஹவுதி தாக்குதல்**

இஸ்ரேல் ராணுவம் - காசாவின் ஹமாஸ் இடையிலான போர் அக்டோபர் ஏழில் தொடங்கியதிலிருந்து இந்த விவகாரத்தில் பேசுபொருள் ஆகியிருக்கும் மற்றொரு அமைப்பு ஹவுதி படைகளாகும். செங்கடலில் இஸ்ரேலை நோக்கிப் பயணிக்கும் அல்லது இஸ்ரேலிலிருந்து பயணிக்கும் சரக்கு கப்பல்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

உலகின் பிரதான கிழக்கு - மேற்கு வர்த்தக வழித்தடமாக செங்கடல் அமைந்துள்ளது. இந்தச் செங்கடலில் வர்த்தக கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருவதன் மூலம் சூயல் கால்வாயை அணுகுவது பெரும் ஆபத்தாக மாறியுள்ளது.

சூயஸ் கால்வாய் வழியாக ஆசியாவுடன் ஐரோப்பாவையும், வட அமெரிக்காவையும் இணைக்கும் முக்கிய வர்த்தகப் பாதையை ஹவுதி அமைப்பினர் சீர்குலைத்துள்ளனர். இந்தப் பாதையையே பல கப்பல்கள் தவிர்க்கத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வுக்கும் வழிவகுத்துள்ளது ஹவுதியின் தாக்குதல்.




முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் இஸ்ரேல் தனது தாக்குதலைத் தொடரும் நிலையில், பென் குரியன் கால்வாய் திட்டம் எனப்படும் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்ட பொருளாதார வாய்ப்பு பற்றிய பேச்சுக்கள் வெளிவந்துள்ளன.

இஸ்ரேலால் சூயஸ் கால்வாக்கு மாற்றாக 1960களில் முதலில் முன்மொழியப்பட்ட சர்ச்சைக்குரிய பென் குரியன் கால்வாய் திட்டம் அறிவிக்கப்பட்டது.






**பென் குரியன் திட்டம்:**

முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் இஸ்ரேல் தனது தாக்குதலைத் தொடரும் நிலையில், பென் குரியன் கால்வாய் திட்டம் எனப்படும் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்ட பொருளாதார வாய்ப்பு பற்றிய பேச்சுக்கள் தற்போது வெளிவந்துள்ளன.

பென் குரியன் கால்வாய் திட்டத்தின் வரலாற்று சூழல், அதன் முன்மொழியப்பட்ட முக்கியத்துவம் மற்றும் சூயஸ் கால்வாயைச் சுற்றியுள்ள சிக்கலான புவிசார் அரசியல் முக்கியமானதாகும்.

சூயஸ் கால்வாயின் சிக்கலான வரலாறு, 1956 இன் முத்தரப்பு ஆக்கிரமிப்பு மற்றும் அதன் மூடல்களின் விளைவாக உலக வர்த்தகத்தில் ஏற்பட்ட எதிர்பாராத அதிர்ச்சிகள் ஏற்பட்டது.

இதுவே இஸ்ரேலால் கட்டுப்படுத்தப்படும் ஒரு மாற்றுக் கால்வாயின் சாத்தியமான மூலோபாய முக்கியத்துவத்தை உணர்த்தியது.

**அணுகுண்டினால் கால்வாய் தோண்டல்**

1963இல் 520 வீரியம் குறைந்த அணு குண்டுகளைப் பயன் படுத்தி இஸ்ரேல் வழியாக ஒரு மாற்று சூயஸ் கால்வாயைத் திறக்க அமெரிக்கா ஒரு திட்டத்தை வைத்திருந்தது.

சூயஸ் கால்வாக்கு மாற்றாக உருவாக்குவதற்கான 1963 அமெரிக்க இரகசிய திட்டம் பின்னர் வெளியானது. இது வீரியம் குறைந்த அணு குண்டு கள் மூலம் இஸ்ரேலின் நெகேவ் பாலைவனத்தின் வழியாக 160 மைல்களுக்கு மேல் தோண்டப்பட இருந் தது.

இஸ்ரேல் வழியாக சூயஸ் கால்வாக்கு மாற்றாக 520 அணுகுண்டுகளைப் பயன்படுத்துவதற்கான முன்மொழிவை அமெரிக்கா பரிசீலித்தது. ஆயினும் இந்தத் திட்டம் ஒரு போதும் நிறைவேறவில்லை.

நெகேவ் பாலைவனத்தின் குறுக்கே இக் கால்வாயை தோண்டுவதற்கு வீரியம் குறைந்த அணு வெடிபொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று அந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பென் குரியன் யார்?**

டேவிட் பென்-குரியன் (1886-1973) போலந்திலிருந்து வந்த ஒரு முக்கிய சியோனிஸ்ட் தலைவர் ஆவார். அவர் இஸ்ரேலின் ஸ்தாபக தந்தை என்றும் அறியப்பட்டார்.

பாலஸ்தீனியர்கள் தங்கள் நிலங்களில் இருந்து பெருமளவில் இடம்பெயர சியோனிச போராளிகளுக்கு உத்தரவு களை வழங்கிய இரக்கமற்ற மனிதராக அவர் விவரிக்கப்பட்டார். அத்துடன் உலகம் முழுவதிலுமிருந்து யூத குடியேறிகளை பாலஸ்தீனத்திற்கு வருவதற்கு உதவினார். அவர் 1948 இல் இஸ் ரேலின் முதல் பிரதம ராக பணியாற்றினார்.

பென் குரியன் கால்வாய் திட்டம் 1960 களில் செங் கடலை மத்தியதரைக் கடலுடன் அகாபா வளைகுடாவின் தெற்கு முனை வழியாக இணைக்க இஸ் ரேலால் முன்மொழியப்பட் டது. இந்த பாதையானது துறைமுக நகரமான ஈலாட் மற்றும் ஜோர்டானிய எல்லை வழியாக, அராபா பள்ளத்தாக்கு வழி யாக நெகேவ் (நகாப்) மலைகள் மற்றும் ஜோர்டானிய மலைப் பகுதிகளுக்கு இடையே சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் இறந்த கடல் படுகையில் மேற்கு நோக்கிச் சென்று, ஒரு பள்ளத் தாக்கு வழியாகச் செல்ல திட்டமிடப் பட்டது.

நெகேவ் மலை (நகாப்) மலைத் தொடரானது மீண்டும் வடக்கு நோக்கிச் சென்று காசா பகுதியைத் தாண்டி மத்தியதரைக் கடலுடன் இணைக்கும். இருப்பினும், செங்கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையே உள்ள இணைப்பு சூயஸ் கால்வாய் வழியாக ஏற்கனவே உள்ளது - எகிப்தில் ஒரு செயற்கை கடல் மட்ட நீர்வழி, இது வட அட்லாண்டிக் மற்றும் வட இந்தியப் பெருங்கடல்களுக்கு இடையே கப்பல்களுக்கு நேரடி வழியை தற்போது வழங்குகிறது. அத்துடன் பயண தூரத்தையும் நேரத் தையும் குறைக்கிறது.

சூயஸ் கால்வாய் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே குறுகிய கடல் வழியை வழங்குகிறது. தற்போது உலகின் வர்த்தகத்தில் சுமார் 12 சத வீதத்தை கையாளுகிறது.



**இஸ்ரேல் ஏன் திட்டத்தை முன்மொழிந்தது?**

சூயஸ் கால்வாய் 1956 இல் அப்போதைய எகிப்திய ஜனாதிபதி கமல் அப்துல் நாசரால் தேசியமய மாக்கப்பட்ட பிறகு, 1948 இல் இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல சந்தர்ப்பங்களில் கால் வாயக்கான அணுகலை எகிப்து மூடியது.



1948 முதல் 1950 வரை இஸ்ரேலிய கப்பல்கள் கால்வாயை அணுகுவதை எகிப்து தடுத்தது. இதனால் கிழக்கு ஆபிரிக்கா மற்றும் ஆசியாவுடன் வர்த்தகம் செய்யும் திறனை பாதித்தது. இதனால் வளைகுடா பிராந்தியத்தில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் திறனை பாதித்தது.

சூயஸ் கால்வாயின் அணுகல் 1956 இல் அனைத்து சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கும் மூடப்பட்டது. எகிப்துக்கு எதிரான முத்தரப்பு ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, சூயஸ் கால்வாயின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்கவும், நாசரை அதிகாரத்திலிருந்து அகற்றவும் முயன்ற இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் இடையே ஒரு கூட்டணி இருந்தது.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளின் (எகிப்து, சிரியா,ஜோர்டான்) கூட்டணிக்கும் இடையே நடந்த அரபு - இஸ்ரேலிய ஆறு நாள் போரின் தொடக்கத்தில், 1967 ஆம் ஆண்டில், சூயஸ் கால்வாய் எட்டு ஆண்டு காலத்திற்கு மூடப்பட்டது.

மோதலின் போது கால்வாய் மூடப்பட்டமையால், மேலும் நிலைமை சர்வதேச பொருளாதார நெருக்கடியாக அதிகரித்தது. அனைத்து வர்த்தக வழிகளும் அரபு நாடுகளால் தடுக்கப்பட்ட போது, கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவுடன் வர்த்தகம் செய்வதற்கான இஸ்ரேலின் திறன், முக்கியமாக பாரசீக வளைகுடாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதும் கடுமையாக தடைபட்டது.

கால்வாய் மூடப்பட்டது உலக வர்த்தகத்திற்கு குறிப்பிடத்தக்க மற்றும் எதிர்பாராத அதிர்ச்சியாகவும், உலகளாவிய வர்த்தகத்தை சீர்குலைத்தது என லாம். சூயஸ் கால்வாக்கு மாற்றாக, குறிப்பாக முக்கிய மேற்கத்திய நட்பு நாடான இஸ்ரேலின் அதிகாரத்தின் கீழ் உள்ள நிலப்பரப்பில் புதிய திட்டம் உருவானது.

**பொருளாதார ஆதாயங்கள்:**

2021 ஆம் ஆண்டில், சூயஸ் கால்வாய் வழியாக சுமார் 20,649 கப்பல்கள் சென்றன. இது 2020 ஐ விட 10 சதவீதம் அதிகமாகும். 2022 ஆம் ஆண்டில், போக்குவரத்துக் கட்டணத்தில் ஆண்டு வருவாய் கூ8 பில்லியன்களாக இருந்தது. சூயஸ் கால்வாய் 30 ஜூன் 2023 இல் முடிவடைந்த நிதியாண்டில் கூ9.4 பில்லியன் வருடாந்திர வருவாயுடன் ஒரு புதிய சாதனையைப் படைத்தது.

சூயஸ் கால்வாய் எகிப்தின் பொருளா தார மையமாக அந்நாட்டிற்கு முதலீடு களை ஈர்த்து, தொழில்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. இதன் முதன்மை முக்கி யத்துவம் சர்வதேச வர்த்தகத்தை எளி தாக்கும் திறனுடன், திறமையான உலகளாவிய வர்த்தக பாதையை உருவாக்கு கிறது.

பென் குரியன் கால்வாய், கட்டப்பட்டால், சூயஸ் கால்வாயை எதிர்த்து எகிப்துக்கு பெரும் நிதி அச்சுறுத்தலை ஏற்படுத்தும். அத்துடன் தற்போதைய 193.3 கிமீ சூயஸ் கால்வாயை விட கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு நீளமாக இருக்கும். மேலும் இக்கால்வாயை கட்டுப்படுத்துபவர் எண்ணெய், தானியங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துக்கான உலகளாவிய விநியோக வழிகளில் பெரும் செல்வாக்கைக் கொண்டிருப்பர்.